இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 இதழ்: 02 பக்கங்கள்: 08 திகதி: 29-01-2012 விலை: 15.00

## அமெரிக்க தூதரக அதிகாரிகளுடன் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சந்திப்பு



அமெரிக்க தூதரக அதிகாரிகளுடன் அரசியல் விவகார துணை செயலர் அடங்கிய குழுவினர் 20 ஜனவரி 2012 அன்று யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்தனர்.

அவர்கள் போரின் பின்னரான நிலைமைகளை அறிவதற்காக வந்திருந்தனர். குறிப்பாக போரின் பின்னர் மக்கள் மீள் குடியேற்றப்படுத்தப்பட்டனரா, மக்களுக்கான வசதிகள் வாய்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளனவா என்பவற்றினை அறிய ஆவலாய் இருந்தனர்.

யாழ் ஆயர் அவர்களோடு உரையாடும் போது மக்கள் மீளக்குடியமர்வதற்கு முதலாவது தேவையாக இருப்பது வீட்டு வசதியாகும். திடீரென வீடுகளை அமைக்க முடியாது இந்திய அரசு 50ஆயிரம் வீடுகளைத் தருவதாக வாக்களித்தபோதும் 5ஆயிரம் வீடுகளையே கட்டிமுடித்துள்ளது.

அடுத்து இவர்களின் வாழ்வாதார தேவைகள் நிறைவுசெய்யப்பட வேண்டும். அரசு இதற்கான உதவிகளை செய்துள்ளது. பல அரச சார்பற்ற நிறுவனங்களும் இநத உதவிகளை செய்து வருகின்றன.

அடுத்ததாக பாதைகள் சீர்செய்யப்பட வேண்டும். இலகுவான போக்குவரத்துக்கான வழிவகைகள் செய்யப்படவேண்டும் மருத்துவ சேவை விரிவாக்கப்படவேண்டும். இதுபோன்ற அடிப்படை தேவைகள் பற்றிய யாழ் ஆயர் முதலில் விளக்கினார்.

போரின் பின்னர் வெளியிடப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகள் பற்றி அவர்கள் யாழ் ஆயரிடம் வினவினர். இது பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்குமா? இதனை நீங்கள் வரவேற்கிறீர்களா? என்று கேட்டபோது யாழ் ஆயர் முதலாவதாக இது பற்றி இன்னும் மக்களுக்கு முழுமையாக தெரியாது. தமிழில் இவ்வறிக்கை மொழியாக்கம் செய்யப்படவில்லை. ஒருவர் கையிலும் புத்தகம் இல்லை. இதில் இருக்கும் குறைபாடுகள் பற்றி பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. இது மக்களுடைய எல்லா அபிலாசைகளையும் நிறைவேற்றக்கூடியதாக இல்லை என்ற எண்ணமே மக்களிடம் உள்ளது. அப்போ யுத்தம் எதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதற்கான பதிலை அரசாங்கம் தர வேண்டும். அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு தரப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

## இந்தியா மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக நின்று வழிநடத்த வேண்டும்

- யாழ். ஆயர் -

இலங்கை அரசானது தமிழ் சிறுபான்மையினருக்கு பொருத்தமான அரசியல் தீர்வொன்றை அடைவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இலங்கையில் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இது ஒரு வழி என இதனை இந்திய வெளிவிவகார அமைச்சு வரவேற்றிருக்கிறது. ஆனால் இலங்கை அரசானது பேச்சுக்களின் வழி மாகாண சபைகள் இயங்குவதற்கு தேவையான அதிகாரங்களை வழங்குவதில் எள்ளளவும் விட்டுக்கொடுக்கவில்லை. 30 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்தின் பின்னரும் பெரும்பான்மையைக் கொண்ட இலங்கை அரசு மத்தியில் இருந்து தமது அதிகாரங்களை வழங்க தாயாராக இல்லை. எனவே இலங்கை அரசிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் வழி இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றிற்கு வழி செய்யும்படி இந்திய அரசை வினயமாக வேண்டுகிறோம். இல்லாவிடின் இப்பேச்சுக்கள் நீண்டு கொண்டே போவதோடு இலங்கை அரசானது புதிய வழிகளைத் தேடி அரசியல் பிரச்சினைக்கு தீர்வினைக்காணும் எண்ணத்தை பின்தள்ளிக் கொண்டே போகும். எனவே இந்திய அரசானது புவியியல் நோக்கங்களையும் தாண்டி உண்மையாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண உழைக்க வேண்டும். இலங்கை அரசானது இந்திய அரசு பேச்சுக்களின்போது மத்தியஸ்தம் வகிப்பதை எதிர்க்கப்போவதில்லை இந்திய சமாதான உடன்படிக்கை வழி முன்பு இந்திய அரசு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்டுநகரில் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் 18-25 ஜனவரி

18 ஜனவரி முதல் 25 வரை உலகெங்கும் அனுஷ்டிக்கப்படும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பிலுள்ள கத்தோலிக்க திருச்சபை, மெதடிஸ்ற் திருச்சபை, அமெரிக்க மிஸன் திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, இரட்சணிய சேனை ஆகியன சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறுதிநாளான 25ம் திகதி அனைத்து திருச்சபைகளும் இணைந்து பொதுவழிபாடொன்றினை ஒழுங்கு செய்துள்ளன. இந்நிகழ்வின் முன்னோடியாக 25ம் திகதி அன்று பிற்பகல் 4.30 மணிக்கு தாண்டவன்வெளி, தூய காணிக்கை அன்னை தேவாலயத்திலிருந்து அனைவரும் பொது ஊர்வலமாகப் புறப்பட்டு கோட்டைமுனை மெதடிஸ்த தேவாலயத்தில் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் பொது வழிபாடு இடம் பெறவுள்ளது.



## அருட்பணி. பீற்றர் துரைரட்ணம் அடிகளார் காலமானார்



வசாவிளானை பிறப்பிடமாகக் கொண்ட அருட்பணி. இராஜசிங்கம் பீற்றர் துரைரட்ணம் அடிகளார் 25-01-2012அன்று காலமானார். இவர் இராஜசிங்கம் தங்கம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வராவர்.

அருட்தந்தையவர்கள் மானிப்பாய், உயிலங்குளம், கரவெட்டி, நெடுந்தீவு, யாகப்பர் ஆலயம் குருநகர், மண்டைதீவு, மயிலிட்டி - ஊறனி, இளவாலை, மாதகல், மிருசுவில், நாவாந்துறை, நாரந்தனை, அச்சுவேலி ஆகிய பங்குகளில் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுவோம்.

## சேவியர் குரூஸ் அடிகளாரின் பொன்விழா



20 டிசம்பர் 2011 அன்று தமது குருத்துவ பொன் விழாவைக் கொண்டாடிய மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஏ. சேவியர் குரூஸ் அடிகளாருடைய பொன்விழா நிகழ்வுகள் 18 ஜனவரி 2012 அன்று மன்னார் மறைமாவட்ட ரீதியாக நடைபெற்றது.

## இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க இணையத்தளம்: tcnlnet.com

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க இணையத்தளமான தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தளம் இலங்கையின் எல்லா மறைமாவட்ட கத்தோலிக்க செய்திகளையும் புலம்பெயர் செய்திகளையும் தினமும் அறிக்கையிடுகிறது. ஞாயிறு தினங்களில் இணையக்காட்சி செய்திகளை (web cast) ஒளிபரப்புகிறது. tcnlnet.com என்றும் முகவரில் இதனை பார்வையிடலாம். தொடர்புகள் மின்அஞ்சல் : **info@tcnlnet.com** முகவரி : பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் 891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இலங்கை. தொலைபேசி:021 222 6085 கைத்தொலைபேசி:0777 165147

## எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்

"எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்." **யோவா 17:21**

கிறிஸ்தவ சமுகம் ஒற்றுமையின் சின்னமாக வாழ அழைக்கப் பட்டுள்ளது. ஏனெனில் கடவுள் ஒருவரே; கிறிஸ்து ஒருவரே; அவரால் உருவாக்கப்பட்ட திருச்சபையும் ஒன்றே; இதுவே கிறிஸ்துவின் திருச்சபை (Church of Christ), கிறிஸ்துவின் உண்மையான மறையுடல். ஆனால் நிஜத்தில் திருச்சபை பலவாறு பிளவுபட்டு காணப்படுகின்றது. கோட்பாடுகள், ஆட்சி நிலைகள், வழிபாட்டு முறைகள், பணிகள் என்பவற்றில் பல்வேறு சபைகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டும் முரண்பட்டும் காணப்படுகின்றன. கிறிஸ்துவின் திருச்சபையின் அடையாளங்கள் தொலைக்கப் படுகின்றன.

கத்தோலிக்க திருச்சபையில் கிறிஸ்துவின் திருச்சபையின் பண்புகள் துண இயல்புகள் நிறைவாக காணப்பட்டாலும் ஏனைய திருச்சபைகளிலும் அப் பண்புகள் மதிக்கத்தக்க வகையில் காணப்படுவதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஏற்றுள்ளது **(கி.ஒ. எண் 4)**. தூய ஆவியின் செயற்பாடு ஏனைய சபைகளிலும் காணப்படுகின்றது.

பிளவுபட்ட நிலையில் கிறஸ்துவின் நற்செய்தியை பறைசாற்ற முடியாது. கிறிஸ்தவ சமுகத்தின் பிரிவு புதிய ஏற்பாட்டு ஆதிக்கிறிஸ்தவ சமுகத்திலேயே தோன்றிய விடயமாகும். **(1கொரி 1:10)**. திரிபுக் கொள்கைகளால் பிரிவு தோன்றியது.

இன்றைய எமது சமூகங்கள் எவ்வாறெல்லாம் பிளவுபட்டிருக்கிறது என்பதைச் சிந்தையில் கொள்வோம். ஆட்சிநிலை, வழிபாட்டுமுறை, பணிகள் என்பவற்றால் மட்டுமல்ல, பதவி, பட்டம், செல்வம், செல்வாக்கு, பலம், பலவீனம், சாதி - சமூகநிலைகள், அந்தஸ்து என பாகுபாடுகள், பிளவுகள் வளர்ந்து சென்று சமூகப் பிளவுகளை ஏற்படுத்தி உள்ளதை நாம் அறிவோம். இப்பிளவுகளால் எத்தனை எத்தனை தீமைகள் வெறுக்கத் தக்க செயல்கள் இடம் பெற்றுள்ளமையை திருச்சபை வரலாறு கூறுகிறது. கொடிய போர்களையும் அதனால் உண்டான வடுக்களையும் திருச்சபை வரலாறு சுமந்து நிற்கின்றது. கிறிஸ்துவின் பெயரைத் தாங்கி வாழும் எம்மை மற்றவர்கள் முன்னுதாரணமாகக் கொண்ட வாழ்க்கை முறை இன்று தலைகீழாகத் தெரிகிறது. இந்த நிலை மாற்றம் பெற வேண்டும். இதையே புனித பவுலின் பின்வரும் போதனை எமக்குத் தெளிவுபடுத்தி நிற்கிறது.

கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை பிளவுபட்டிருக்கலாகாது என்பதை புனித. பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமடலில் மிக அழகாக, ஆழமாக கூறியுள்ளார்.

ஆக, இன்றைய மனித சமுகத்தினுள் கிறிஸ்துவைக் கொண்டு சென்றிட அழைக்கப்பட்டவர்களே கிறிஸ்தவர்களாகிய நாம் என்பதை, என்றுமே நாம் மறந்து விடலாகாது.

எனவே இப்பாரிய பணியில் எவ்வாறு நம்மை ஈடுபடுத்திக் கொள்ள, இணைத்துக் கொள்ள முடியும்?

ஆம்! நாம் வாழும் சமுகத்தில் புதிய புதிய வடிவில் இன்று தோன்றியுள்ள சிக்கல்கள் சவால்கள், துன்பங்கள், தேவைகள் மத்தியில் கிறிஸ்து அளித்த விடுதலையை நாமும் சுவைத்து, மற்றவரையும் சுவைக்கச் செய்யும் கருவிகளாகச் செயற்பட வேண்டும். இச் செயலினூடாக மிக நீண்ட காலமாக நம்மவர்கள் ஏங்கித் தவித்துக் காத்திருக்கும் அந்த உண்மை அமைதியை நாம் எப்போதோ ஓர் நாள் ஏற்படுத்தி விட முடியும்.

ஆக, கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான இவ் எழுர்ச்சி வாரத்திலே. கிறிஸ்துவின் பெயரைத் தாங்கி வாழும் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது கோட்பாடுகள். கொள்கைகள், வழிபாட்டு முறைகளால் வெவ்வேறு சபைகளைச் சார்ந்தவர்களாய் வேறுபட்டிருந்தாலும், கிறிஸ்துவின் விடுதலைக்குள் பிரவேசித்து வாழ, அவ்விடுதலையை நம்மவர்க்கு அளித்திட ஒன்றுபட்டுச் செயற்படுவோம்!! எமது வேற்றுமைகள் மத்தியிலும் ஒற்றுமையில் வளர்வோம்!! ஒன்றித்துப் பணி செய்வோம்!!!

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

# தர்மபுரி மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, ஆயர் இலாரன்ஸ் பயஸ் நியமனம்

இந்தியாவின் தர்மபுரி மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, ஆயர் இலாரன்ஸ் பயஸ் துரைராஜ் அவர்களை இவ்வெள்ளிக் கிழமை நியமித்துள்ளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

தர்மபுரி மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர் ஜோசப் அந்தோணி இருதயராஜ் அவர்கள், ஓய்வு வயது காரணமாக பதவி விலகுவதை, திரு அவைச் சட்டம் எண் 401:1ன் படி ஏற்றுக் கொண்ட திருத்தந்தை, சென்னை - மயிலை உயர்மறை மாவட்டத்தின் துணை ஆயராக, இதுவரைப் பணியாற்றிய ஆயர் இலாரன்ஸ் பயஸ் துரைராஜ் அவர்களை நியமித்துள்ளார்.

1954ம் ஆண்டு ஜூன் 14ம் திகதி சென்னையில் பிறந்த ஆயர் இலாரன்ஸ் பயஸ், 1981ம் ஆண்டு டிசம்பர் 28ம் திகதி குருவாகவும், 1999ம் ஆண்டு பெப்ரவரி 21ம் திகதி ஆயராகவும் திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஆயர் இராரன்ஸ் பயஸ், சென்னை - மயிலை உயர்மறைமாவட்டத் துணை ஆயராக, 1998ம் ஆண்டு நவம்பர் 28ம் திகதி நியமனம் செய்யப்பட்டார்.

# இணைய தளத்தில் கத்தோலிக்கர்களின் இருப்பு, தேவையான ஒன்று

இணைய தளத்தில் கத்தோலிக்கர்களின் இருப்பு, தேவையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்றார் திருப்பீட சமூகத்தொடர்பு அவையின் தலைவர் பேராயர் கிளவ்தியோ செல்லி.

சுவிட்சர்லாந்தின் மெர்ஸி பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற கருரத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய பேராயர் செல்லி, 2009மத் ஆண்டில் 44கோடி கத்தோலிக்கர்கள் இணைய தளத்தைப் பயன்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இன்றைய நவீன சமூகம் தகவல்களின் காலத்திலிருந்து உரையாடல் காலத்திற்கு கடந்து வந்துள்ளது என்பதையும் குறிப்பிட்டுப் பேசிய பேராயர் செல்லி, திருத்தந்தையர்கள் 6ம் போல், இரண்டாம் ஜோன் போல் மற்றும் 16ம் பெனடிக்ட், தகவல் தொடர்புத் து[illegible]கு ஆற்றியுள்ள பங்களிப்பு, கத்தோலிக்க விசுவாசத்தை எடுத்துரைக்க நம் ஒவ்வொருவருக்கும் உதவுவதாக உள்ளது எனவும் கூறினார்.

# இலங்கையின் மனித வள மேம்பாட்டிற்கு 100 கோடி : இந்தியா

இலங்கையின் மனித வளத்தை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக. நூறு கோடி ரூபா மதிப்பிலான கல்வி உதவிளை வழங்குவதற்கு இந்திய அரசு தீர்மானித்திருப்பதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம் கிருஸ்ணா தெரிவித்தார்.

இந்நிதிஉதவி இளங்கலை, முதுநிலை மற்றும் முனைவர் படிப்புகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு பிரித்து அளிககப்படுவதாகவும் இதனால் இலங்கையில் உயர் கல்வி படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரிக்கும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

# மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் ஆன்மீகக் குருவின் செயற்பாடு

கபபல் மூழ்கப்போகிறது என்பதை உணர்ந்ததும், கப்பலின் கோவிலில் இருந்த திருநற்கருணையைத் தான் அருந்தியதாகவும், பின்னர் மக்களுக்குத் தேவையான உதவிகள் செய்ததாகவும் ஓர் இத்தாலிய குரு கூறினார்.

கடந்த வாரம் வெள்ளியன்று இத்தாலியின் ஜிகிலியோ தீவுக்கருகே 4000க்கும் அதிகமான உல்லாசப் பயணிகளைச் சுமநது செனற கொஸ்ரா கொன்கோர்டியா என்ற கப்பல் மூழ்கியதில் 11 பேர் இறந்துள்ளனர், மற் றும் 21 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்தக் கப்பலில் ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டிருந்த 70 வயதான அருள்தந்தை ஜியகோம மாட்டீனோவிடம் கப்பல் மூழ்கப் போகிறது என்பதை அறிந்ததும் தான் மேற்கொண்ட முயற்சிகள் குறித்து கடல் பயணிகளின் ஆன்மீகபபணி ஒருங்கிணைப் பாளரான அருள்தந்தை ஜஸன் டி சில்வாவிடம் கூறினார்.

அருள் தந்தை மாட்டீனோ வத்திக்கான் வானொலிக்கு அளித்த பேட்டியொன்றில், கப்பலின் பணியாளர்கள் பொறுப்பின்றி நடந்து கொண்[illegible] என்று ஊடகங்கள் கூறி வருவதை மறுத்துப் பேரியதொடு, ஜிகிலியோ தீவில் இருந்த பங்கு மக்களும், பங்குத் தந்தையும் இவ் விபத்திலிருந்து காப்பாற்றபபட்டவர்களுக்கு செய்த உதவிகளையும் எடுத்துரைத்தார்.

இந்தக் கப்பலில் பணி செய்த மும்பையைச் சேர்ந்த ஜஸன் டி சில்வா என்ற இளைஞன், கடவுளை நம்பி தான் கடலில் குதித்ததாகக் கூறினார். இவருடன் வேறு ஐந்து மும்பை இளைஞர்களும் இந்த விபத்திலிருந்து உயிர் தப்பியுள்ளனர் என்று மற்றொரு செய்திக் குறிப்பு கூறுகிறது.

# கொழும்புத்துறையில் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் திருவிழாத் திருப்பலி


தகவல்: எஸ். யேசுதாஸ்

அருளாளர் யோசப்வாஸ் அடிகளின் 300ஆவது விண்ணகப்பிறப்பு நாளான கடந்த 16ந் திகதி அவர் குடாநாட்டிற்குள் பிரவேசித்த இடமான கொழும்புத்துறையில் திருவுருவச்சிலை திறக்கப்பட்டு திருவிழா கொண்டாடப்பட்டது.

எழிலூர் வேளாங்கண்ணி மாதா ஆலயத்திற்கு அருகில் சிலை அமைக்கப் பட்டு ஆலயத்தில் திரிதின ஆராதனைகள் நடைபெற்று அருட்திரு அருள்நேசன் அடிகளார் தலைமையில் திருவிழாத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

யோசப்வாசின் 300ஆவது விண்ணகப் பிறப்பு விழா ஏற்பாட்டு குழுவினருடன் பாஷையூர் பங்குத் தந்தையும் இணைந்து இத்திருவுருவச்சிலையை நிறுவினர்.

# பிற சமயத்தவர்களுடனான திருமண வழிபாடு

அருட்தந்தை – ம. றெக்ஸ் சவுந்தரா

கத்தோலிக்க கிறிஸ்தவனுடைய; கிறிஸ்தவளுடைய வாழ்வில் திருமண அருட்சாதனம் முக்கிய இடம் பெறுகிறது. இறைவனாலே நேரடியாக, முதன்முதலாகப் படைப்பின் தொடக்கத்திலேயே ஏற்படுத்தப் பட்ட அமைப்பு திருமணமாகும்.

இத் திருமணத்தைக் கத்தோலிக்க திருச்சபை ஓர் அருட்சாதனமாகக் கொள்கின்றது. திருச்சபையில் நடைபெறுகின்ற அனைத்துத் திருமணங்களும் அருட்சாதனத் திருமணங்களாக அமைய வேண்டுமென்ற நிலைப்பாட்டைத் திருச்சபை கொண்டுள்ளது. அதாவது ஒரு கத்தோலிக்க திருச்சபையில் திருமுழுக்குப் பெற்ற ஓர் ஆணுக்கும் கத்தோலிக்க திருச்சபையில் திருமுழுக்குப் பெற்ற ஒரு பெண்ணுக்குமிடையே முழுமையான, உண்மையான சம்மதத்துடனும் முறியல் தடைகள் (விக்கினங்கள்) ஏதுமின்றி, திருச்சபையின் திருமண முறைப்படி நடைபெறுகின்ற திருமணம் ஓர் அருட்சாதனத் திருமணமாகும் *(திருச்சபைச் சட்டம் 1055,2)*. இத்தகைய திருமணத்தை நற்கருணைப் பலியுடன் இணைத்துக் கொண்டாடுவது சிறப்பானதும் அர்த்தமுள்ளதுமாகும். இதைத் திருச்சபையும் ஊக்குவிக்கின்றது.

அத்தோடு, கத்தோலிக்க திருச்சபையில் திருமுழுக்குப் பெற்ற ஒருவருக்கும், அங்கிலிக்கன், மெதடிஸ்ற், தென்னிந்தியத் திருச்சபை, அமெரிக்கன் மிசன் (Mainline churches) போன்ற பிற திருச்சபைகளில் திருமுழுக்குப் பெற்ற ஒருவருக்குமிடையே நடைபெறுகின்ற திருமணமும் ஓர் அருட்சாதனத் திருமணமாகத் திருச்சபை கொள்ளுகின்றது. ஏனென்றால், கத்தோலிக்க திருச்சபை தனது திருமுழுக்குச் சடங்கின்போது பயன்படுத்தப்படுகின்ற செபம் (form), பொருள் (Matter) ஆகியவற்றையே இத் திருச்சபைகளும் தமது திருமுழுக்குச் சடங்கின்போது பயன்படுத்துகின்றன. இதனால் அவர்களுடைய திருமுழுக்கைக் கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொள்கின்ற காரணத்தினால் அத்தகைய திருமுழுக்கைப் பெற்றவருடனான திருமணத்தை ஓர் அருட்சாதனத் திருமணமாகக் கொள்கின்றது. இத்தகைய திருமணத்தையும் நற்கருணைப் பலியுடன் இணைத்துக் கொண்டாட முடியும்.

மேலும், கத்தோலிக்க திருச்சபையில் திருமுழுக்குப் பெற்ற ஒருவருக்கும் பிற சமயத்தை அல்லது அடிப்படைவாதக் கிறிஸ்தவ சபையைச் சார்ந்த ஒருவருக்குமிடையே திருமணம் நடைபெறுகின்றபோது அதைத் திருச்சபை ஓர் அருட்சாதனத் திருமணமாகக் கொள்வதில்லை. இத்தகைய திருமணங்கள் இலங்கை ஆயர் மன்ற விதிகளின்படி யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் திருப்பலியோடு இணைத்துக் கொண்டாடப்பட முடியாது (யாழ். குருக்களுக்கான வழிகாட்டி 5,D,3).

ஆயினும், பிறசமயத்தவரான மணமகன் அல்லது மணமகள் மட்டில் குரு மிகுந்த கரிசனை கொள்ள வேண்டும். அவரையும் திருமணச் சடங்கிற்கு வருகின்ற அவரது உறவினர், நண்பர்களையும் அன்புடனும் சகோதர உணர்வுடனும் வரவேற்பதில் கவனம் எடுக்க வேண்டும் (யாழ். குருக்களுக்கான வழிகாட்டி 5,D,10).

**பிற சமயத்தவர்களுடனான திருமண வழிபாடு:**

பிற மதத்தவருடனான அல்லது கிறிஸ்தவ சபையைச் சார்ந்தவருடனான ஒரு திருமணம், திருப்பலியில் கொண்டாடப்பட முடியாது (யாழ். குருக்களுக்கான வழிகாட்டி 5,D,3). ஆயினும், வேண்டிய தடைவிலகல் அனுமதியை ஆயரிடமிருந்து பெற்றபின் குருவானவர் அவ்வாறான திருமணத்தைத் திருப்பலி அல்லாத ஒரு திருமணச் சடங்கில் ஆசீர்வதிக்க முடியும் (யாழ். குருக்களுக்கான வழிகாட்டி 5,D,1).



இவ்வாறு யாழ் மறைமாவட்டக் குருக்களுக்கான வழிகாட்டி கோடிட்டுக் காட்டினாலும், "ஆசீர்வதிக்க முடியும்" என்பது குறுகிய பார்வையோடு பார்க்கப்படக் கூடாது. இத்தகைய திருமணச் சடங்கைப் பக்தியான முறையிலே, அருளூட்டும் வகையிலே (solemnly) நிறைவேற்றக் குரு அழைக்கப்படுகின்றார். இத்தகைய திருமணச் சடங்கில் ஒரு குரு பின்வரும் சடங்கு முறையைப் பின்பற்றலாம்.

**தொடக்கச் சடங்கு:**

திருமணச் சடங்கிற்கு உரிய ஆடைகளை (surplice and stole) அணிந்தவராய்க் குரு ஆலயத்தில் கூடியுள்ள மக்கள் முன் தோன்றி, எழுச்சியுடன் தூய திரித்துவத்தின் பெயரால் வழிபாட்டை ஆரம்பித்து, மன்னிப்பு வழிபாட்டை நடாத்தலாம். சூழ்நிலைக்கேற்ப மன்னிப்புப் பாடலோ அல்லது மன்னிப்பு பஜனையோ பாடி மன்னிப்பு வழங்கலாம்.

**இறைவார்த்தை வழிபாடு:**

திருப்பலியில் நடைபெறுவதைப் போன்று இறைவார்த்தை வழிபாட்டைக் குரு நடாத்தலாம். முதலாம் வாசகம், திருப்பாடல், நற்செய்தி வாசகம் என்பவற்றோடு குரு மக்களுக்கு மறையுரை ஆற்றலாம். பிற சமயத்தைச் சார்ந்தவர்களும் இச்சடங்கிலே பங்கு கொள்வதால், இயேசுக் கிறிஸ்துவையும் எமது கத்தோலிக்க விசுவாசப் பேருண்மைகளையும் அவர்கள் அறிந்துகொள்ள இது ஓர் அரிய சந்தர்ப்பம் என்பதைக் குரு உணர்ந்து மறையுரையாற்ற முன்வர வேண்டும்.

இதனைத் தொடர்ந்து அன்றைய வழிபாட்டின் முக்கிய பகுதியாகிய திருமணச் சடங்கு இடம் பெறும். பின்னர் விசுவாசிகள் மன்றாட்டோடு வழிபாட்டின் முதற் பகுதி நிறைவு பெறும்.

**நற்கருணை வழிபாடு:**

தொடக்கவுரை, நற்கருணை மன்றாட்டு என்பன இடம் பெறக்கூடாது.

மீட்பரின் கட்டளையால்! என்ற செபத்தோடு வழிபாட்டைத் தொடரலாம். புனிதமிகு நற்கருணையைக் கத்தோலிக்கராகவுள்ள மணமகனோ அல்லது மணமகளோ பெற்றுக்கொள்ளலாம். திருமணச் சடங்கில் கலந்துகொள்ளும் கத்தோலிக்கர் யாராவது புனிதமிகு நற்கருணையைப் பெற்றுக் கொள்ள விரும்பிக் கேட்டால் குரு அதனை அவருக்கு வழங்க முடியும் *(திச 918)*.

**முடிவுச் சடங்கு:**

நன்றிச் செபம் சொல்லி, குருவின் ஆசீர்வாதத்தோடு வழிபாட்டை நிறைவு செய்யலாம்.

இத்தகைய சடங்கில் தேவைக்கு ஏற்றபடி பாடல்களையும் பாடலாம் (தொடக்கப் பாடல், நன்றிப் பாடல்).

திருச்சபை கற்பிக்கின்ற இத்தகைய ஒழுங்கு முறைகள் இறைமக்களின் மீட்புக்காகவும் திருச்சபையின் ஒருமைப்பாட்டைக் காக்கவுமே என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள முன்வரவேண்டும். தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் அனைவரும் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுகின்றபோது அங்கே ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும்.

# அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் வழியில் மறை பணியாற்றுவோம்

– யாழ் ஆயர் –



அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 300ஆவது ஆண்டு நிறைவுத் திருவிழா யாழ் கொட்டடியில் உள்ள ஆலயத்தில் கடந்த 22ம் திகதி நடைபெற்ற போது விழாத்திருப்பலியை ஒப்புக்கொடுத்த யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தனது மறையுரையில் இலங்கைத் தீவின் திருத்தூதராகிய அருளாளர் யோசப்வாஸ் முனீந்திரன் இறைவன் மீது கொண்ட விசுவாசத்தினாலும், மரியன்னையின் மீது கொண்ட அசையாத பக்தியினாலும் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார் என புகழாரம் சூட்டினார்.

ஆயர் அவர்கள் தொடர்ந்தும் தனது மறையுரையில் இலங்கைக்கு செல்ல அழைப்புக் கிடைத்ததும் அருளாளர் முதலில் மரியாள் முன் மண்டியிட்டு உமது திருச்சித்தம் இதுவென்றால் அங்கே அனுப்பும். என்னை முழுதும் அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன் நான் உமது அடியான் என செபித்தார். செபமாலையுடன் ஒல்லாந்தருக்கு அஞ்சாது இரப்போன் வேடத்தில் வீடு வீடாகச் சென்று இரகசிய மறை பணியாற்றினார்.

கண்டியில் கடும் வரட்சி ஏற்பட்ட போது பிறசமய குருக்கள் மழைக்காக செய்த யாகங்கள் தோற்றுப் போக அரசன் விமலதர்மசூரியனின் வேண்டுகோளை ஏற்று சிலுவையை வைத்து முழந்தாள் படியிட்டு இரவு முழுவதும் உருக்கமாக மன்றாடினார். ஆச்சரியமிக்க அற்புதமாக மழை கொட்டியது. அன்றுமுதல் வெளிப்படையாக மறைபரப்புக்கு அனுமதி கிடைத்தது.

இறைவனின் வழியை மீறுவது சுலபம் கடைப்பிடிப்பது கடினம். இக்கடினமான வழியில் வெற்றி கண்டு மறைப் பணியாற்ற உறுதி கொடுத்த இறைவனைப் போற்றி அவர்வழி தொடர்வோம் எனவும் ஆயர் குறிப்பிட்டார்.

ஆயருடன் அருட்தந்தையர்களான இரட்ணராஜா (அ.ம.தி), சணிஸ்ரன், விஜின்ரஸ், பங்குத்தந்தை பா.பி. இராசசிங்கம் ஆகியோர் திருப்பலியை நிறைவேற்றினர்.

# மறைக்கல்வியின் நோக்கம்

அருட்சகோதரி – யூடினா செல்வநாயகம்
மறைக்கல்வி நடுநிலையம்.

ஒவ்வொரு மாணவரும் மறைக் கல்வியினூடாக கிறிஸ்துவைப் பிரதி பலிக்க வேண்டும். சிறப்பாக மூன்று மறை மாவட்டங்களும் இணைந்து எல்லோருக்கும் மறைக்கல்வி என்ற கருப்பொருளில் சிறுவர் முதல் பெரியவர் வரை யாவரிலும் கிறிஸ்துவை உருவாக்குவதே யாவருக்கும் மறைக்கல்வி என்ற தொனிப்போடு இவ்வாண்டு உருண்டோடப் போகிறது.

மறைக்கல்வி மாணவ மாணவியரை விசுவாச வாழ்வுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். திருமுழுக்கின்போது ஊன்றப்பட்ட விசுவாசம் என்னும் விதை முளைவிட்டு, தழைத்து முழு வளர்ச்சி அடைய வேண்டும். இறைவனின் சாயலாக பிறக்கும் குழந்தைகள் கிறிஸ்துவில் வாழ்ந்து முதிர்ச்சி பெற்று வயது வந்த பொறுப்பான கிறிஸ்தவனாகி, கிறிஸ்துவுக்கு உயிருள்ள சாட்சியாக விளங்க அழைக்கப்படுகின்றார்கள். இந்த விசுவாச வளர்ச்சியையும், கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியையும் பேணி வளர்ப்பதே மறைக்கல்வி என்பதாகும்.

மாணவர்கள் விசுவாசத்தில் வளர்ந்து, கிறிஸ்துவின் மீது ஆழ்ந்த விசுவாசம் கொள்ளவும், அவர் வழியாகத் தூய ஆவியில் தந்தை கடவுளுடனும் இன்றைய உலகில் ஒவ்வொரு மனிதனுடனும் சமூக உறவு கொள்ளவும் மறைக்கல்வி நம் மாணவர்களை பயிற்றுவிக்க வேண்டும். இதுவே மறைக்கல்வியின் நோக்கமுமாக அமைகின்றது.

புதியதொரு வாழ்வு நம்மில் உருவாக உந்தப்படும் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், சமூகசீர்கேடுகள், ஏக்கங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள், தேவைகள் என்பவற்றை நற்செய்தியின் ஒளியில் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

எல்லா நிலைகளிலும் கிறிஸ்துவின் ஒளியைப் பெற்று மறைக்கல்வியில் ஊட்டம் பெற்றவர்கள் நாளாந்த வாழ்வில் விசுவாச வாழ்வை முழுமையாக வாழ்ந்து காட்ட அழைக்கப்படுகின்றார்கள். வாழும் சூழ் நிலையிலும், செல்லும் இடங்களிலும், சந்திக்கும் மனிதரிலும் பணி செய்யும் இடங்களிலும் தன்னுடைய முன்மாதிரியான வாழ்க்கையால் கிறிஸ்துவுக்கு சான்று பகர வேண்டும். படைத்தவருக்கே எல்லாவற்றையும் அர்ப்பணித்து கிறிஸ்துவை அகில உலகின் ஆண்டவராக பறைசாற்ற வேண்டும்.


DIPLOMA IN NURSING

(3 Years)

HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE

விண்ணப்ப இறுதித் தினம் 5-02-1012
கற்கை நெறிக் கட்டணம் 750/=

க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களைத் திருச்சிலுவை சுகநல நிலையம் 767/4, கடற்கரை வீதி, யாழ்பாணம். என்ற முகவரிக்குச் சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்

Add: 07/12

தொ.பே.இல: 021 300 1102 OR 222 2512

மாதகல் தூய லூர்து அன்னை திருவிழா

மாசி 10ம் நாள் வெள்ளிக் கிழமை - கொடியேற்றத்துடன் தினமும் மாலை5.00 மணிக்கு செபமாலையும் தொடர்ந்து திருபபலியும் இடம் பெறும்.
மாசி 18ம் நாள் சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு - தேர்ப்பவனியும், நற்கருணை விழாவும்
மாசி 19ம் நாள் ஞாயிறு காலை 7.00 மணிக்கு - திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

Add: 09/12

பங்குத்தந்தை

# திருச்சபையின் ஒன்றித்த உறவும்: திருச்சபைகளுக்கிடையேயான ஒன்றிப்பும்

அருட்திரு. அ.பீ. திருமகன்

## முன்னுரை

திருச்சபையின் பணிகளுள் கிறிஸ்தவர்களுக்கிடையிலான ஒன்றிப்பு திருச்சபையின் ஒன்றித்த உறவை விரிவுபடுத்துவதற்கு ஒரு முக்கிய ஊடகமாக திகழ்கின்றது. இந்த ஒன்றிப்பின் மூலம் எடுக்கப்படுகின்ற சாட்சி வாழ்வும் மறைபரப்பும் கிறிஸ்துவால் திருச்சபைக்கு வழங்கப்பட்ட பணியை நிறைவுற செய்வதாக அமைகின்றது. பிரிவுபட்ட நிலையில் கிறிஸ்துவை அறிவிப்பதைத் தவிர்த்து ஒன்றித்த உள்ளத்துடன், அவரை பாரெங்கும் பறைசாற்றும் பொழுது அது பூரணமான சாட்சிய வாழ்வாக மாறி, திருச்சபை அது ஏற்படுத்தப்பட்ட நோக்கை நிறைவு செய்ய காரணமாகின்றது (காண். கிறிஸ்தவ ஒன்றிப்பு எண் 1).

## 1. கிறிஸ்துவின் திருச்சபை

தந்தையாம் இறைவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட கிறிஸ்து இறையரசை போதித்தார். இந்த 'நற்செய்தி' பணியை தொடர்ந்தாற்றவென அவர் திருச்சபையை ஏற்படுத்தினார். இதுவே கிறிஸ்துவின் திருச்சபை (Church of christ): உண்மையான அவரது மறையுடல், இது ஒன்றே. மக்களை மீட்புப் பாதையில் வழி நடாத்தும் கருவியும் இதுவே.

கிறிஸ்து ஏற்படுத்திய திருச்சபை ஒன்று எனினும், இன்று பல திருச்சபைகள் தோன்றியிருப்பதை காணலாம். கிறிஸ்துவின் திருச்சபையின் பண்புகள் கத்தோலிக்க திருச்சபையில் நிறைவாகவும், முழுமையாகவும், உன்னதமாகவும் உள்ளன. இயேசு கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும் திருத்தூதர்களை அடிக்கற்களாகவும் கொண்ட நற்செய்தி வழி திருவருட்சாதனங்களுடாக பேதுருவின் வழிமரபில் மக்களை மீட்பு நோக்கி அழைத்துச் செல்வது கிறிஸ்துவின் திருச்சபை. இதனை கத்தோலிக்க திருச்சபை உன்னதமான முறையில் கடைப்பிடிக்கின்றது.

கிறிஸ்துவின் திருச்சபை என்றால், அது கத்தோலிக்க திருச்சபையே என்ற கருத்து இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் மாற்றம் கண்டுள்ளது. அதாவது, கிறிஸ்துவின் திருச்சபையின் சில பண்புகள் கத்தோலிக்க திருச்சபையல்லாத ஏனைய திருச்சபைகளிலும் உள்ளது. ஆனால், அவை நிறைவுள்ளதாக காணப்படவில்லை. ஆன்மீக மீட்புக்குரிய சில புனிதமான அம்சங்கள் இச்சபைகளில் காணபடுகின்றன. தூய ஆவியாரின் செயற்பாடு ஏனைய சபைகளிலும் பரந்து கிடபபது கண்கூடு (காண். கிறிஸ்தவ ஒன்றிப்பு எண் 4).

## 2. கீழைத்தேச சபைகளுடன் கத்தோலிக்க திருச்சபையின் உறவு

திருச்சபையின் வரலாற்றில் மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில் எபேசு, கல்சிடோன் போன்ற பொதுச் சங்கங்களின் எதிரொலியாக கீழைத்தேசம் மேலைத்தேசம் என திருச்சபையில் பதினொராம் நூற்றாண்டில் பெரும் பிளவு ஏற்பட்டது. பலஸ்தீனம், துருக்கி, வட ஆபிரிக்கா போன்ற பிரதேசங்களில் கீழைத்தேச திருச்சபை நிலைத்தும் நீடித்தும் வருகின்றது. பல நூற்றாண்டுகளாக பிரிந்திருந்து ஒருவருக்கொருவர் எதிரிகள் என உறவை முறித்த இவர்கள், 1963 செப்.29ம் நாள் ஜெருசலேமில் பாப்பு 6ம் சின்னப்பர் கீழைத்தேச திருச்சபையின் தலைவரான முதுபெரும் தந்தை அத்தனாகோரசை சந்தித்ததன் மூலம் தம் உறவை புதுப்பித்துக் கொண்டார்கள்.

### 2.1 ஒற்றுமையும் வேற்றுமையும்

கீழைத்தேச சபைகள் மிகவும் நெருங்கியவிதமாக கத்தோலிக்க திருச்சபையுடன் ஒன்றித்த பண்பினைக் கொண்டுள்ளன. திருத்தூதரின் வழிமரபில் ஊன்றித் திளைத்து திரு விவிலியத்தில் தம் வாழ்வினை அமைத்துள்ளனர். 'இறைமகன் கிறிஸ்துவே உண்மை மீட்பர்' என விசுவசித்து, நற்கருணையில் கிறிஸ்து உண்மையாகவே பிரசன்னமாயுள்ளார் என்பதை ஏற்கின்றனர். இத்தகைய விசுவாசமும் நம்பிக்கையும் கத்தோலிக்க திருச்சபையில் உள்ளது போன்றே அங்கும் காணப்படுகின்றது. கீழைத்தேச சபைகள் கத்தோலிக்க திருச்சபையில் உள்ளது போன்றே அங்கும் காணப்படுகின்றது. கீழைத்தேச சபைகள் தனித்துவமான முறையில் திருததூதரின் படிபபினைகள் வழிபாட்டுமுறைகள் என்பவற்றை பின்பற்றுகின்றனர்.

பல ஒன்றித்த தன்மைகள் இரு திருச்சபைகளுக்குமிடையே காணபபட்டாலும் கீழைத்தேச சபைகள் திருத்தந்தையை ஏற்பதில்லை. பேதுருவின் வழிமரபினராக திருத்தந்தையை தலைவராக ஏற்பது கத்தோலிக்க திருச்சபையின் முக்கிய பண்பாகும். ஆனால், இது கீழைத்தேச சபையில் இல்லை. இவர்கள் தங்கள் தலைவராக முதுபெரும் தந்தையரையும், ஆயர்களையும் நியமிக்கின்றனர். கீழைத்தேச சபைகளில் திருத்தந்தையை தலைவராக ஏற்றுக்கொண்டவர்கள் கத்தோலிக்க கீழைத்தேச திருச்சபையாக உள்ளனர்.

### 2.2 தற்போதைய உறவுநிலை

இந்த இரு திருச்சபைகளுக்கிடையிலான உறவு தற்போது வளர்ச்சி கண்டுள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு கீழைத்தேச சபைகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். திருத்தந்தை 6ம் சின்னப்பர் சில முக்கிய முதுபெரும் தந்தையருடன் உரையாடி விசுவாச அறிக்கையில் (declarations) கையொப்பமிட்டார். இவ்வாறு, முதுபெரும் தந்தையாகிய அபரியுனே பவுலூஸ் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரை 1993ம் ஆண்டு உரோமையில் சந்தித்தார். இவ்வாறான சந்திப்புக்கள் கிறிஸ்து இயலிலும், விசுவாசம், நற்கருணையிலும் இரு திருச்சபைகளுக்கும் இடையிலான ஒன்றிப்பை ஆழப்படுத்தி வருகின்றன.


## 3. ஏனைய பிரதான சபைகளுடனான உறவு

### 3.1 பிரதான சபைகள் சில

மழைக்கு முன் பறந்து திரியும் ஈசல்கள் போல், பல புதுப்புதுச் சபைகள் கடந்த சில காலங்களில் பிறந்திருப்பது கண்கூடு. ஆனால், அவை அனைத்தும் 'திருச்சபைகள் என அழைக்கப்பட தகுதியற்றவை. சில சபைகளே கத்தோலிக்க திருச்சபையுடன் உறவை ஏற்படுத்தக்கூடியனவாக உள்ளன. பிரதானமாக, சீர்திருத்தவாதியான மாட்டீன் லூதரால் லூத்தரன் சபை 16ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரிந்த சபையாக நிறுவப்பட்டது. இது கல்வின், மெதடிஸ் போன்ற பல புரட்டஸ்தாந்து சபைகள் பிறக்க காரணமாகியது. இவை தவிர 1534ம் ஆண்டு 8ம் ஹென்றி அரசனால் முதல் மனைவி இருக்க 2ம் திருமண அனுமதி மறுப்பினால் அங்கிலிக்கன் சபை (Church of England) ஆரம்பிக்கபபட்டது. ஆசியாவில் தென் இந்திய திருச்சபையும் பிரதான திருச்சபைகளுக்குள் அடங்கும்.

### 3.2 ஒற்றுமையும் வேற்றுமையும்

பல்வேறு காலப்பகுதிகளில் பல்வேறு நபர்கள் சபைகள் பிரிந்துபோனாலும் இவை சில ஒற்றுமைத் தன்மைகளை கத்தோலிக்க திருச்சபையுடன் கொண்டுள்ளன. கிறிஸ்துவின் இறை மனித தன்மையை, விசுவாசமாக ஏற்கின்றனர். மீட்பளிக்கும் அருட்சாதனமான திருமுழுக்கை தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் தண்ணீரால் வழங்குகின்றார்கள். தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படும் புதிய தமிழ் பொதுமொழிபெயர்ப்பு இதற்கொரு சான்றாகும்.



கத்தோலிக்கருக்கும் பிரதான பிரிந்த கிறிஸ்தவர்களுக்குமிடையே உறவு ஒன்றிப்பு (Communion) இன்னும் முழுமையடையவில்லை. இதற்குக் காரணம் இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளே. இவர்கள் பிரிவதற்கு அடிப்படையாக அமைந்த கொள்கைகள் விசுவாச சத்தியங்களை முழுவதுமாக ஏற்காத நிலை, பேதுருவின் வழிவருபவருடன் ஒன்றித்த உறவின்மை, திருப்பட்டங்கள், நற்கருணை விசுவாசம் போன்ற மாறுபட்ட தன்மை, புனிதர் வணக்கத்தை ஏற்காமை போன்ற பல விடயங்கள் இச்சபைகள் கத்தோலிக்க சபையிலிருந்து வேறுபட காரணங்களாகின்றன.

### 3.3 தற்போதைய உறவு நிலை

கிறிஸ்துவில் ஒன்றித்த வாழ்வுக்கு சான்று பகர அழைக்கப்பட்ட திருச்சபை பிரிந்து, ஒன்றுக்கொன்று முரணாகி, எதிர்சாட்சிய வாழ்வை தொடர்ந்தும் வாழ்வதை புரட்டஸ்தாந்து சபைகள் சில விரும்பாது, 19ம் நூற்றாண்டில் ஒன்றிப்பு முயற்சியில் ஈடுபட்டன. பின், கத்தோலிக்க திருச்சபையும் இதன்மட்டில் அக்கறை கொள்ளத் தொடங்கியது பாப்பு 11ம் பத்திநாதர். 'பிழை இருதரப்பிலுமே' எனக் கூறி பிழையை ஏற்றுக்கொண்டார். 12ம் பத்திநாதர் எதிர்ப்பாளரை (Protestants) 'பிரிந்த நம் சகோதரர்கள்' என அழைத்தார். இவை அனைத்துக்கும் சிகரமாக 2ம் வத்திக்கான் சங்கம் 'கிறிஸ்தவ ஒன்றிப்பு' என்ற கொள்கைத் திரட்டை வெளியிட்டது. திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் யூபிலி ஆண்டின் ஆரம்ப நிகழ்வுக்கு ஏனைய பிரிந்த சபையாரின் தலைவர்களை உரோமைக்கு அழைத்திருந்தார். பகைமை உணர்வு களைந்து அனைவரும் சகோதரர்களாக ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும் தற்போதைய நிலை எதிர்கால ஒன்றிப்புக்கு கட்டியம் கூறுகின்றது.

## 4. கிறிஸ்தவ ஒன்றிப்பு

### 4.1 அவசியத்தன்மை - திருநூலில்

"எல்லாரும் ஒனறாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!" (யோவா. 17:2). இவ் வார்த்தைகளுடாக பிரிவுபடா, ஒன்றித்த கிறிஸ்தவ விசுவாசிகளாக நாம் வாழவேண்டுமென இறைவன் அழைப்பு விடுத்திருக்கின்றார். தற்போதுள்ள பிரிவு கிறிஸ்துவின் மண்ணக வருகையின், ஒற்றுமையை நிலைநாட்டும், நோக்கிற்கு புறம்பானதாகும். கிறிஸ்துவில் இணைந்த ஒரே நம்பிக்கையில் அனைவரும் ஒன்றிக்க தூய பவுல் அழைக்கின்றார். "நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே" (எபே. 4:4-5). எனவே கிறிஸ்துவுக்குள் அனைத்து விசுவாசிகளும் சமமே. இத்தகைய திருவிவிலிய வார்த்தைகள் 'கிறிஸ்தவ ஒன்றிப்பை' வலியுறுத்துகின்றன. திரித்துவத்தின் ஒன்றிப்பே கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்புக்கு முன்னுதாரணமாக உள்ளது.

### 4.2 ஒன்றிப்பை ஏறபடுத்தும் முயற்சி

'கிறிஸ்தவ ஒன்றிப்பு' என்பது முதலிலே கிறிஸ்தவர்களின் மனதிலே திகழவேண்டும். பிறசகோதர கிறிஸ்தவர்களை கிறிஸ்துவில் இணைந்தவர்களாக ஏற்கவேண்டும். சபைகளை ஒன்றிக்க ஏற்படுத்தப்படும் முயற்சி அதன் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பை ஏற்படுத்தவென திருச்சபைகளின் உலக பேரவை (World Council of Churches) 1948ம் ஆண்டு நிறுவப்பட்டது. சபைகளுக்கிடையிலான பிளவு நற்செய்தியை அறிவிப்பதற்கு தடையாக உள்ளது என உணர்ந்த கத்தோலிக்க திருச்சபை இவ் ஒன்றிப்புக்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்கிறது. ஏனைய சபைகள் தம்மிடம் திரும்ப வேண்டுமென்ற கடின போக்கை தளர்த்திவிட்டது. நற்கருணை கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு சின்னமாகத் திகழ்கின்றது. பல சபைகள் ஒன்றிக்க இது அடித்தளமாக அமைந்தது. கீழைத்தேச சபைகள் சிலவற்றின் ஒன்றிப்பு இதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

### 4.3 ஒன்றிப்புக்கான வழிமுறைகள்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் 'கிறிஸ்தவ ஒன்றிப்பு' எனும் கொள்கைத்திரட்டில் ஒன்றிப்புக்கான சில வழிமுறைகளை முன்வைத்துள்ளது.

**செபம்:** கிறிஸ்தவ ஒன்றிப்பின் ஆன்மா செபமாகும். ஒன்றித்த செபம் மக்களை புதுவித நோக்கிற்கு இட்டுச் செல்கின்றது. பொது தனிச் செபங்கள் கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்திற்கு அவசியமானவை. "இதய மாற்றமும் வாழ்வின் புனிதத்தன்மையும் கிறிஸ்தவர்களின் ஒன்றிப்பிற்கான பொது, தனிச் செபங்களுமே கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் முழுவதன் உயிர் நாடியாகக் கருதப்பட வேண்டும்" (கிறிஸ்தவ ஒன்றிப்பு எண் 8)

**தபம்:** ஒன்றிப்பு ஏற்பட மன்நந்திறந்து செபிப்பதோடு எம்மை ஒறுத்து முழு விசுவாசத்துடன் தபம் செய்தல் அவசியமானது.

**உரையாடல்:** ஒன்றிப்பிற்கு செபம் ஆன்மாவாக இருப்பது போல, உரையாடல் இதற்கு ஓர் அடித்தளமாக உள்ளது. உரையாடல் என்பது வெறுமனே எண்ணங்களை பரிமாறிக்கொள்வதல்ல, மாறாக, கொடைகளை பரிமாறிக்கொள்வதுமே. இவ்வகை உரையாடல்கள் ஒன்றிப்பிற்கு தடையான முரண்பட்ட கருத்துக்களை சீர் செய்ய உதவுகின்றது.

**கற்றல்:** ஒன்றித்து கற்றல் ஊடாக "பிரிந்த சகோதரர்களின் உள்ளத்தை..." (கி.ஓ.12) அறிந்து இனங்காணலாம். இறையியலையும் ஏனைய அறிவியலையும் துல்லியமாக கற்று, திருவிவிலிய ஆய்வுகளை இணைந்து மேற்கொள்ளலாம்.

**ஒத்துழைத்தல்:** "சமூக காரியங்களிலே ஒத்துழைப்பு இத்துணை மிகுந்து வரும்..." (கி.ஓ.12) என ஒத்துழைத்து செயற்பட இரண்டாம் வத்திக்கான் சங்கம் அறிவுரை கூறுகின்றது.

**நிறைவாக:**

தூய ஆவியார் தம் செயற்பாடுகளை எல்லாரிலும் பரந்து செயற்படுத்துகின்றார். திருச்சபை மனிதர்களின் ஒருங்கிணைவாக இருப்பினும் அதில் இறையருள் அணைகடந்து ஓடுகின்றது. பல காரணங்களால் சபைகள் பிரிந்தாலும் அவைகளுக்கிடையில் பல ஒன்றித்த தன்மைகள் இழையோடுகின்றன. இவைகளே சபைகளை ஒன்றிக்க ஆரம்ப துணைக்கருவிகளாயுள்ளன. ஒருவரையொருவர் ஏற்று அவரவர் மீட்புப் பண்பினை மதித்து கிறிஸ்துவின் திருச்சபை மண்ணில் பரவ 'கிறிஸ்தவ ஒன்றிப்பு' சபைகளாக ஒவ்வொரு சபையும் தன் பங்களிப்பை ஆற்றவேண்டும். 2ம் வத்திக்கான் சங்கத்திலே கிறிஸ்துவின் திருச்சபை என்றால் அது கத்தோலிக்க திருச்சபைதான் என்ற கருத்துமாறி கிறிஸ்துவின் திருச்சபை கத்தோலிக்க திருச்சபையில் உள்ளது என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. இது ஒரு சொல் மாற்றமே: 'Church of Christ is the Catholic Church' - changed into - 'Church of Christ subsisits in the Catholic church' இம் மாற்றம் திருச்சபையின் ஒன்றித்த உறவுக்கு ஓர் உயிர்நாடியாக மாறியுள்ளது.

# விதியின் நிழல்

## சிறு கதை

கவித்தா இன்னும் வீடு திரும்பவில்லை கவித்தாவின் தந்தை ஆனந்தராஜ் அங்கும் இங்குமாக குட்டி போட்ட பூனையைப் போல் நடந்து கொண்டிருந்தார் சில நாட்களுக்கு முன்பு நடந்த அந்தக் கொடூரமான சம்பவம் அவர் மனதின் அதிக பதற்றத்திற்கு காரணமாக இருந்தது ஆம் அந்தச் சம்பவம் மட்டும் நடந்திராவிட்டால் இன்று அந்த தந்தையின் உள்ளம் அந்துபட்டுபட்டிராது. ஆனந்தத் தாண்டவமாடியிருக்கும். கவித்தா கண்டவரை வசீகரிக்கும் அழகு கொண்டவள். மெல்லிய கூந்தல், வளைந்த புருவங்கள், மென்மையுடன் ரோஜாவும் கலந்த நிறம். ஒரு முறை பார்க்கத் தூண்டும் அழகு. உயர்தரம் கற்று விட்டு ஒரு தனியார்கம்பனியில் கிளார்க்கு பணிபுரிகின்றாள். கம்பியூட்டர், ஆங்கிலம் இரண்டும் கைவசம் இருந்ததால் இலகுவில் வேலை கிடைத்து விட்டது. கவித்தா பெற்றோரை நேசித்தாள் பெற்றோர் விருப்பபடியே திருமணம் நடக்க வேண்டும் எனவும் நினைத்தாள். அன்று ஞாயிற்றுக்கிழமை கவித்தாவுக்கும் அவளது தந்தைக்கும் விடுமுறை நாள். வழமையாகவே தந்தையும் மகளும் சேர்ந்து கொண்டு தாயிடம் வம்பிழுப்பார்கள். இன்றும் அப்படித்தான் "ரெண்டு பேரும் சேர்ந்தாச்சா? நாளைக்கு மாமியார் வீட்டுக்குப் போறது சமைககத் தெரியாதா? அம்மா என்னதான் வளர்ப்பு வளர்த்தாங்களோ தெரியல்லனு என்னத்தானே திட்டுவாங்க. நீங்களும் செல்லம் குடுங்க. லீவு நாள்ல சரி சமைக்கக் கத்துக்கலாமல்ல. அத விட்டுட்டு அப்பாவும் பிள்ளையும் எங்கிட்ட வம்பிழுங்க" என்றாள் கவித்தாவின் தாய் தனலட்சுமி.

அதெல்லாம் எம் பொண்ணு சரியா செய்வா. நானே உன் சமையலை சாப்பிடலையா 27 வருஷமா என்றார் ஆனந்தராஜ். அப்படி சொல்லுங்கப்பா. என் செல்ல அப்பா என்று கவித்தா கூற இருவரும் சிரித்தனர். 'ம்' பார்க்கலாம் என்ற படி தனலட்சுமி திரும்ப, வாசலில் யாரோ அழைப்பு மணியை அழுத்தினார்கள் யாராக இருக்கும் என்றெண்ணியபடி ஆனந்தராஜ் வர, அவரைத் தொடர்ந்து கவித்தாவும் தாயும் வந்தனர். யாரோ சிலர் தாம்பூலத் தட்டுடன் வாசலில் நிற்பதைக் கண்டு உள்ளே வாங்க என்று ஆனந்தராஜ் கூற தனலட்சுமி ஆனந்தராஜை கேள்விக் குறியுடன் நோக்கினாள். கவித்தாவும் ஆனந்தராயும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, வந்தவர்கள் தட்டை மேசை மேல் வைத்தனர். ஆனந்தராஜ் சற்றுத் தயங்கியபடி யார் நீங்க இதலெல்லாம் என்ன? என்று கேட்டார். வந்தவர்களில் வயது முதிர்ந்த ஒருவர் ஆனந்தராஜ் உங்களுக்கு அறிவிக்காம வந்தததுககு முதலில் எங்களை மன்னிக்கனும். நாங்க என்னோட பேரனுக்கு உங்க பொண்ணை மணம் பேச வந்திருக்கோம் எறைார். ஒரு கணம் தன் மகள் காதல் ஏதும் பண்ணியிருப்பாளோ என்று நினைத்தவர் - அப்படியிருந்தால் நிச்சயம் சொல்லியிருப்பாள் என்று நினைத்தவர் அவர்களை அமரச் சொல்லி விட்டு தானும் அமர்ந்தார். இவரின் மனநிலையை அறிந்தவர் போல முதலில் பேசியவரே பேச்சை தொடர்ந்தார். ஆனந்தராஜ் இவன் நிகில். என்னுடைய பேரன் ஒரு தனியார் நிறுவனத்தில் கமபியூட்டர் எஞ்சினியராக வேலை பார்க்கிறான். நிகில் உங்க மகளை கோவிலில் வைத்துப் பார்த்திருக்கிறான். அவனுக்கு ரொம்ப பிடித்துப் போயிடுச்சு. அப்புறம் உங்க பொண்ணைப் பற்றியும் உங்க குடும்பத்தைப் பற்றியும் விசாரிச் சிட்டான். இதே நேரம் நாங்களும் அவனுக்கு திருமணம் முடிக்கலாம்னு யோசிததோம். நிகில் கிட்ட பேசினபோது தான் உங்க முகவரியத் தந்து உங்க பெண்ணைப் பற்றி சொன்னான். பெத்த வங்க தன்னோட பையன் நல்லாயிருக்கணும்னு தான் நினைப்பாங்க. அதனால் உங்களப்பற்றியும் உங்க குடும்பத்தப் பற்றியும் விசாரித்தாங்க. அதுல எந்தக் குறையும் இல்லை. நல்ல குடும்பம்னு தெரிஞ்சுது. உடனே பேசிப்பார்க்கலாம்னு கிளம்பி வந்துட்டோம். அதோட நிகில் எந்த விசயத்துலயும் அவசரப் படமாட்டான். அவனோட முடிவு சரியானதா இருக்குங்கிற நம்பிக்கை எப்பவும் எங்களுக்குண்டு. அதோட எங்க பையன் தெரிவு சரியானதுனு இங்க வந்ததும் தெரிஞ்சிட்டோம். என்று முடித்தார்.

அதே வேளை கவித்தாவின் ஓரப்பார்வை மாநிறத்துடன் கம்பீரமான தோற்றத்துடன் அளவான உயரத்தினையும் கொண்டிருந்த அந்த இளைஞனை அளவெடுத்துக் கொண்டிருப்பதை உணர்ந்த நிகில் மெதுவாகத திரும்பி கண்சிமிட்ட திடீர் தாக்குதலால் நிலை குலைந்த கவித்தா படக்கென்று திரும்பி உள்ளே சென்று விட்டாள். அதே வேளை வீட்டிற்கு வந்தவர்களிற்கு ஏதும் உண்ணக் கொடுக்காமல் எப்படி இருப்பது என்று நினைத்த தனலட்சுமி உள்ளே சென்று தேநீர் தட்டுடன் வந்தாள். தேநீர் அருந்தியதும் நிகிலின் தந்தை ஆனந்தன் உங்க மனநிலை எங்களுக்குப் புரியுது. நீங்க அவசரப்பட்டு ஏதும் சொல்ல வேண்டாம். எல்லோரும் கலந்து பேசிட்டு உங்க பெண் விருப்பத்தையும் கேட்டிட்டு சொல்லுங்க. இது எங்களோட முகவரி நாங்க வாறோம். என்று விடை பெற்றுச் சென்றனர். அவர்கள் சென்றதும் "என்னங்க பண்ணுகிறது" என கணவனை நோக்கினாள் தனலட்சுமி. ஆனந்தராஜ் "அவசரப்படாத விசாரிப்போம். அப்புறம் கவித்தாவிற்குப் பிடித்திருந்தால் பேசலாம். எல்லாம் கடவுள் விட்ட வழி" என்றார்.

அடுத்து வந்த சில நாட்களின் பின் ஆனந்தராஜ் நிகிலின் குடும்பம் தொடர்பாக முழு விபரங்களையும் சேகரித்துக் கொண்டு வந்தார். அவர் விசாரித்த வகையில் அது ஒரு நல்ல குடும்பம் என்பது தெரிய வந்தது. எனவே தனலட்சுமியிடம் தனலட்சுமி பையனோட குடும்பமோ தொடர்பாக எந்தப் பிரச்சினையும் இல்ல. கவித்தாவுக்குப் பிடிச்சிருந்தா ஜாதகத்தைப் பார்த்து விட்டு மிச்சத்துப் பேசுவோம் என்றார்.

அன்று இரவு கவித்தா நிகில் தொடர்பாக யோசித்துக் கொண்டிருக்க தனது தாய் அறைக்குள் வந்தது கூடத் தெரியவில்லை. கவித்தா கவித்தா என இரண்டு முறை அழைத்தும் மகள் திரும்பாதமை கண்டு யோசனையுடன் தோளில் கை வைக்க திடுக்கிட்ட கவித்தா சாரிம்மா சும்மா தான் ஏதோ யோசிததுக் கொண்டிருந்தேன் என்றாள். தாய் மகளின் மனம் புரிந்தவளாக சிரித்துக் கொண்டே என் செல்லத்தோட முகத்துல கல்யாணக்களை வந்திடுச்சின்னு சொல்ல, சும்மா போம்மா எப்பவும் உனக்கு விளையாட்டுத்தான் எனச் சிணுங்கியவாறு தாயின் மடியில் முகம் புதைத்தாள். அப்போதைக்கு அது வெறும் ஆறுதலாக இருந்தது. தனலட்சுமி தன் செல்ல மகளின் தலையை வருடியவாறு ஏம்மா உனக்கு கல்யாணத்துல இஷ்டம் தானே. உனக்கு பிடிக்காததை நாங்க செய்ய மாட்டோம். என்னம்மா சொல்ற எனும் போதே புன்னகையுடன் நிமிர்ந்த கவித்தா உங்களுக்கு சரின்னா அது சரியாத்தானே இருக்கும். அப்புறம் என்ன எதுக்கும்மா கேட்கனும்? உங்களுக்கு சரி என்றால் எனக்கும் சரி என்றாள். சரிடா வா சாப்பிடலாம் என்று மகளை அழைததுச் சென்றாள் தனலட்சுமி. ஓரிரு வாரங்கள் சென்றதும் பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. இதன் பிறகு இடையிடையே கவித்தாவும் நிகிலும் சந்தித்து தம் விருப்பு வெறுப்புக்களை பகிர்ந்து கொண்டனர். பெரும்பாலன விடயங்களில் இருவரினதும் விருப்புக்களும் ஒன்றாகவே இருந்தன. இதுவே அவர்களின் புரிந்துணர்வுக்கு துணை புரிந்தது. திருமணத்திற்கு 15 நாட்களுக்கு முன்பாவே இரு வீட்டாரும் அழைப்பிதழ்கள் கொடுக்க ஆரம்பித்து விட்டனர். கவித்தாவும் நிகிலும் கூட தம் நண்பர்களுக்கெல்லாம் அழைப்பிதழ்கள் கொடுத்து விட்டனர். அவர்களுக்குள் சொல்ல முடியாத இனம் புரியாத உணர்வு. பல நேரங்களில் இருவருமே தம் நிலை மறந்து கனவுகளில் மிதப்பார்கள். கவித்தாவின் பெற்றோரைப் பொறுத்தவரை தம் மகள் தம்மை விட்டுப் பிரிவது மிகக் கவலையைத் தந்தாலும் நல்ல எதிர்காலம் அமைந்ததால் தம் கவலையை மறந்தனர். நாளை திருமணம் இன்றே வீடுகளை கட்டி விட்டது. சொந்தங்கள் எல்லாம் வந்து விட்டனர். ஒரே கூச்சலும் கிண்டலும் கேலியுமாக வீடே சந்தோசத் தாண்டவமாடியது. கவித்தாவின் வீட்டிலும் இதே நிலைதான் இதில் கவித்தாவின் கன்னத்தில் சிவப்பழகை அதிகரித்தது. விடிந்தால் திருமணம் என்னதான் பார்த்து செய்தாலும் ஏதாவது மறந்து விடுகிறது என்பதால் கவித்தாவின் பெற்றோரும் களைத்து விட்டனர். களைப்பில் தூக்கம் வரவில்லை. நடக்கப் போகும் திருமணக் கனவு தான் நிழலாடியது.

அதே வேளை நிகிலின் வீட்டிலும் அதே பரபரப்புத்தான். நிகிலின் நண்பர்கள் நிகிலை துளைத்தெடுத்து விட்டனர். என்னதான் சமாளித்தாலும் நிகிலும் படபடப்பில்தான் இருந்தான். அதிகாலை 4 மணிக்கே பெரியவர்கள் எழும்பி விட்டார்கள். எல்லோரும் ஆயத்தமாகி 7மணிக்கெல்லாம் திருமண மண்டபத்திற்குப் புறப்பட தயாராகினர். நிகிலுடன் அவனின் நண்பர்கள் இருப்பதால் மற்றவர்கள் எல்லோரும் ஒரு வாகனத்தில் புறப்பட நிகிலும் அவனது நண்பர்களும் மாப்பிள்ளைக்கென வரவழைக்கப்பட்ட வானில் புறப்பட்டார்கள். அதேவேளை கவித்தாவின் வீட்டிலுள்ள அனைவரும் மண்டபத்திற்கு வந்து விட்டனர். கவித்தாவின் அழகு மெருகேறியிருந்தது. கவித்தா வானத்திலிருந்து இறங்கி வந்த தேவதை போல் " இருந்தாள். அவளின் முகத்தின் பிரகாசம் ஆயிரம் விளக்கொளிகளுக்கு சமமானதாக இருந்தது. மண்டபத்தின் முகப்பில் நாதஸ்வர வாத்தியங்களின் இசை முழங்கி கொண்டிருந்தது. சொந்த பந்தங்கள் நிறைந்து நிகிலின் வருகையை மண்டபமே எதிர்பார்த்திருந்தது. இதே வேளை நிகில் தனது நண்பர்களின் கேலிப் பேச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறிய வேளையில் அச்சம்பவம் நடந்தது. எதிர்பாராத விதமாக எதிரே வந்த வாகனத்தில் வான் மோதியதில் நிகிலும் அவனது நண்பர்களும் தூக்கி வீசப்பட்டனர். வீசப்பட்டதில் நிகிலின் நண்பர்கள் அதிஷ்டவசமாக பாதையோரத்தில் வீசப்பட்டார்கள். ஆனால் நிகில் மாத்திம் பாதையில் வீசப்பட்ட பின்னால் வந்த லொறி ஒன்று நிகலின் மேல் ஏறிச் சென்றது. ஒரே கணத்தில் எல்லாம் முடிந்து விட்டது. கவித்தா வின் வாழ்க்கையும் தடம் புரண்டு விட்டது. களை கட்டிய மனை களையிழந்து விட்டது. மணம் வீசிய மலர்கள் வாடிவிட்டனர். மண விழா கண்ட வீடு மரண வீடாகி விட்டது. கவித்தாவின் மணமும் அழுதழுது சிதைந்து விட்டது. இரண்டு வீட்டாரும் துவண்டு விட்டனர். காரியங்கள் எல்லாம் முடிந்து விட்டன. இதையடுத்து வந்த சில நாட்களில் யார் யாருக்கு ஆறுதல் சொல்லுவதென்றே தெரியாமல் போய் விட்டது. இந்த சம்பவத்தில் துவண்டு போன கவித்தா இன்னும் வீடு வராதது கண்டுதான் அந்த தந்தையின் மனம் புலம்பியது. இதுதான் அந்த பதற்றத்திற்கு காரணம் அதே வேளை கவித்தா வந்து விட்டாள்.

தந்தையின் மனதைப் படித்த அவள் அப்பா அவர் தந்த துக்கத்தையே நானும் தரமாட்டேன்ப்பா. இதற்கு என்ன சொல்வது விதியா சதியா என தெரியலையேப்பா. அப்பா என் மனப் பாரம் தீர நான் அழுதுடலாம். நீங்க வேண்டாம்ப்பா. நீங்க சொல்லுவங்களே எல்லாம் கடவுள் விட்ட வழியென்று. அதுதான் இது" என தோளில் சாய ஆதரவாகத் தலையை தடவினார். என்ன தான் ஆறுதல் படுத்தினாலும் எல்லோர் மனதிலும் அது ஆறாத வடுதான்.

ந. நமில்டன்
மண்குழி வீதி,
ஊர்காவற்றுறை.

## உலகில் அதிகரிக்கும் சட்டவிரோத கருக்கலைப்புகள்

உலக அளவில் நடக்கும் அனைத்து வகையான கருக்கலைப்புகளிலும் சரிபாதியானவை முறையான மருத்துவக் கண்காணிப்பு இல்லாத பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் என்று உலக நல்வாழ்வு நிறுவனத்தின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இப்படியான பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்களில் பெரும்பாலானவை ஆபிரிக்கா மற்றும் ஆசிய கண்டங்களைச் சேர்ந்த வளர்ந்து வரும் நாடுகளில் நடப்பதாகவும் இவ்வறிக்கை கூறுகிறது.

உலக அளவில் நடக்கும் பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்களால் ஏற்படும் உயிரிழப்புக்களில் ஏறக்குறைய பாதியளவு, ஆபிரிக்காவில் நடப்பதாகவும் அந்நிறுவன அறிக்கை கூறுகிறது.

உலக அளவில் ஏற்படும் கர்ப்பகாலப் பெண்கள் இறப்பில் 13 விழுக்காடு ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் நடப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது, கடந்த பத்து ஆண்டுகளாக படிப்படியாக குறைந்துவந்த கருக்கலைப்புக்களின் எண்ணிக்கை தற்போது ஒருவித தேக்க நிலையை அடைந்திருபபதாக கூறுகிறார்கள்.

இப்பிரச்சினை இந்தியாவில் இன்னும் மோசமாக இருப்பதாக மகப்பேறு மருத்துவர்களுக்கான சங்கத்தின முன்னாள் தலைவி ஜயசிறி கஜராஜ் கூறியுள்ளார்.

## சிந்திக்க ஓர் சித்திரம்

### கிறிஸ்துவில் ஒன்றிணைவோம்




கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் 2012

ச. சுலோச்சனா

## யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் தினம் - 2011
## கட்டுரைப்போட்டி முடிவுகள் (மறைக்கோட்ட மட்டம்)

### யாழ் மறைக்கோட்டம்

| இடம் | பெயர் | பிரிவு | பங்கு |
|---|---|---|---|
| 1 | எ. அன்றியா | 1 | திருநெல்வேலி |
| 2 | ஜெ. ஷெரோவா | 1 | சுண்டிக்குளி |
| 3 | எ. கௌத்தமி | 1 | பாசையூர் |
| 1 | த. லஸ்சிக்கா | 2 | திருநெல்வேலி |
| 2 | ஜெ. சறோன்மரியா | 2 | O.L.R. யாழ்ப்பாணம் |
| 3 | P. ருத்நிலோஷனா | 2 | சுண்டிக்குளி |
| 1 | யூ. மரிய றாபினி | 3 | பாசையூர் |
| 2 | சூ. மேரி ஜெனனி | 3 | திருநெல்வேலி |
| 3 | றொஷாளி அன்ரன்ராஜ்குமார் | 3 | O.L.R. யாழ்ப்பாணம |

### இளவாலை மறைக்கோட்டம்

| இடம் | பெயர் | பிரிவு | பங்கு |
|---|---|---|---|
| 1 | றெ. விஜித்திரா | 1 | பெரியவிளான் |
| 2 | றி. நிருஷகன் | 1 | மல்வம் |
| 3 | சனோஜன் | 1 | சில்லாலை |
| 1 | நி. ஆன்சிக் நிறோமி | 2 | மல்வம் |
| 2 | கி. அனோஜினி | 2 | பெரியவிளான் |
| 3 | யோ. அ. ஜெனோஷன் | 2 | சில்லாலை |
| 1 | ம. சாளின் வேஜினி | 3 | மல்வம் |
| 2 | ம. தகானா | 3 | சில்லாலை |
| 3 | யே. மதுமிதா | 3 | பெரியவிளான் |

### பருத்தித்துறை மறைக்கோட்டம்

| இடம் | பெயர் | பிரிவு | பங்கு |
|---|---|---|---|
| 1 | அ. வேஜின் மேரி | 1 | சாவகச்சேரி |
| 2 | அ. அபிசாயினி | 1 | கரவெட்டி |
| 3 | பெ. கயேந்தினி | 1 | மிருசுவில் |
| 1 | த. ரொன்யா | 2 | கரவெட்டி |
| 2 | ஜெ. ஜென்ஸி | 2 | மிருசுவில் |
| 3 | பொ. கீர்திகா | 2 | புலோப்பளை |
| 1 | அ. எட்வின் | 3 | சாவகச்சேரி |
| 2 | த. எமிலின் சிந்தியா | 3 | கரவெட்டி |
| 3 | வி. மேரி சோபனா | 3 | பருத்தித்துறை |

### கிளி - முல்லை மறைக்கோட்டம்

| இடம் | பெயர் | பிரிவு | பங்கு |
|---|---|---|---|
| 1 | சி. டிலோஜினா | 1 | வட்டக்கச்சி |
| 2 | செ. டர்சனா | 1 | தர்மபுரம் |
| 3 | சு. அலஸ்ரீனா | 1 | வலைப்பாடு |
| 1 | ஜேசுதாஸ் நியூஷன் | 2 | புதுக்குடியிருப்பு |
| 2 | மி. கஸ்மினி | 2 | முல்லைத்தீவு |
| 3 | நிர்மலதாஸ் | 2 | குமுழமுனை |
| 1 | அ. குகதர்சினி | 3 | தர்மபுரம் |
| 2 | உ. லக்ஷாஜினி | 3 | வலைப்பாடு |
| 3 | யூ. யூட்சாம்னி | 3 | முழங்காவில் |

### தீவகம் மறைக்கோட்டம்

| இடம் | பெயர் | பிரிவு | பங்கு |
|---|---|---|---|
| 1 | எ. யோண் பென் | 1 | மண்டைதீவு |
| 2 | யோ. யோணெக்கா | 1 | நாரந்தனை |
| 3 | றெ. விதுஷா | 1 | மண்டைதீவு |
| 1 | அ. புவிதா | 2 | நாரந்தனை |
| 2 | அ. அஜந்தினி | 2 | நாரந்தனை |
| 3 | வி. அன்ரனி றொபின்சன் | 2 | மண்டைதீவு |
| 1 | எ. அன்ரனற் ஜீவிதா | 3 | மண்டைதீவு |
| 2 | ந. றபேக்கா | 3 | நாரந்தனை |
| 3 | அ. மேரிகசில்டா | 3 | மண்டைதீவு |

## தேசிய கத்தோலிக்க இலக்கிய விழா மறைமாவட்டத்தில் நடைபெற்று வெற்றி பெற்ற பங்குகளின் விபரம்

தேசிய கலை இலக்கிய விழாவை முன்னிட்டு யாழ். மறைமாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட பேச்சு குழுப்பாட்டு போட்டிகளின் முடிவுகள் இங்கே தரப்பட்டுள்ளன. இப்போட்டிகள் யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் 07-01-2012ம் ஆண்டு நடைபெற்றது.

**பேச்சுப் போட்டி:**

| இல | மறைக்கோட்டம் | பிரிவு | பங்கு | இடம் | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | I | பாசையூர் | 1ம் இடம் | அருள்ராஜ் அருண்யா |
| 02 | பருத்தித்துறை | I | தாளையடி | 2ம் இடம் | எட்வின் ஜெயராசா மேரி பவுஸ்தீனா |
| 03 | தீவகம் | I | மண்டதீவு | 3ம் இடம் | அலோசியஸ் மரியசிலோஜானா |
| 04 | யாழ்ப்பாணம் | II | பாசையூர் | 1ம் இடம் | எட்மன் ஜோர்ச் அனுசிகா |
| 05 | இளவாலை | II | பண்டத்தரிப்பு | 2ம் இடம் | டினோஜா ஜெறாட் ஜொய்சிலி பயஸ் |
| 06 | தீவகம் | II | மண்டதீவு | 3ம் இடம் | யோன் அன்ரனி டிலக்சன் |
| 07 | தீவகம் | III | மண்டதீவு | 1ம் இடம் | சகாயசீலன் எமறன்சியா |
| 08 | கிளி/முல்லை | III | கிளிநொச்சி | 2ம் இடம் | தர்மலிங்கம் அனுசியா |

**கட்டுரைப் போட்டி:**

| இல | மறைக்கோட்டம் | பிரிவு | பங்கு | இடம் | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | கிளி/முல்லை | I | கிளிநொச்சி | 1ம் இடம் | திருநாயகம் பிரிங்கா |
| 02 | பருத்தித்துறை | I | தாளையடி | 2ம் இடம் | யாக்கோப் செல்வக்குமார் பிரின்சிக்கா |
| 03 | தீவகம் | I | மண்ட தீவு | 3ம் இடம் | பீனற்றன் யூட் கனிஸ்ரன் |
| 04 | யாழ்ப்பாணம் | II | யாழ் பேராலயம் | 1ம் இடம் | அருள்நாயகம் ஜறின் யூலியா |
| 05 | தீவகம் | II | மண்டைதீவு | 2ம் இடம் | எட்மன் ஜெயசீலன் அன்ரனற் ஜீனிதா |
| 06 | யாழ்ப்பாணம் | II | திருநெல்வேலி/ கோப்பாய் | 3ம் இடம் | பற்றிக் நிக்ஷன் குயின்சிலின் |
| 07 | இளவாலை | III | மாதகல் | 1ம் இடம் | அற்புதராசா ஜெசிற்றா செலஸ்ரீன் |
| 08 | பருத்தித்துறை | III | தாளையடி | 2ம் இடம் | யோன்சன் பெனடிற் மேரி சுகனியா |
| 09 | கிளி/முல்லை | III | முழங்காவில் | 3ம் இடம் | யேசுதாசன் காணிக்கைமலர் |

**குழுப் பாடல்:**

| இல | மறைக்கோட்டம் | பிரிவு | இடம் | பங்கு |
|---|---|---|---|---|
| 01 | கிளி/முல்லை | I | 1ம் இடம் | வலைப்பாடு |
| 02 | இளவாலை | I | 2ம் இடம் | மாதகல் |
| 03 | யாழ்ப்பாணம் | I | 3ம் இடம் | குருநகர் |
| 04 | இளவாலை | II | 1ம் இடம் | பண்டத்தரிப்பு |
| 05 | கிளி/முல்லை | II | 2ம் இடம் | வலைப்பாடு |
| 06 | யாழ்ப்பாணம் | II | 2ம் இடம் | பாசையூர் |
| 07 | இளவாலை | III | 1ம் இடம் | பண்டத்தரிப்பு |
| 08 | இளவாலை | III | 1ம் இடம் | மாதகல் |
| 09 | கிளி/முல்லை | III | 3ம் இடம் | வலைப்பாடு |

### எல்லோருக்கும் மறைக்கல்வி!

மறைக்கல்வி என்பது பிற[illegible] முதல் இறப்பு வரை தொடரவேண்டிய முயற்சியும் பயிற்சியுமாகும். இது வாழ்நாளெல்லாம் தொடர்ந்து நடைபெற்று நமது நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அளிக்க வேண்டும். இது வகுப்பறைக்கோ சிறார்களுக்கோ மட்டுமே உரியது என்னும் புரிதல் தவறானது.


## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
15 - 08 - 1937



உதிர்வு
04 - 01 - 2012

### திருமதி. சலாக்கனி அரியரட்ணம்

"வாழ்வின் வழியை நான் அறியச் செய்தீர்
உமது முன்னிலையில எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு"
(தி.ப. 2:28)

நம்ப முடியவில்லை நீங்கள்
எம்முடன் இல்லை என்பதை,
நம்புகிறோம் இன்னமும்
எம்மத்தியில் உள்ளீர்கள் என்று,
நீர் தேடிய உறவனைத்தும்
உம் பிரிவால் கதிகலங்கி,
மக்களுடன் மருமக்களும் பெருந்துயருற்று,
நீர் வளர்த்த பேரப்பிள்ளைகள் உம் முகம்
தேடித்தவித்து, செய்வதறியாமல் திசை தடுமாறி நிற்க,
மறைந்தும் மறையாமல் எம் நெஞ்சினுள்
நிலையாய் நிலைத்துள்ளீர்,
மறக்க நினைக்கிறோம் முடியவில்லை,
யாராலும் ஈடுசெய்யவும் முடியவில்லை
உம் இழப்பை,
வாழ்ந்தது போதும் என்று
புகுந்து விட்டீர் வான் வீடு,
எம்முடன் வாழ்ந்தது போதாதென்று
கலங்குகின்றோம் இப்போது.

40/1 அன்னாள் வீதி
பாண்டியன் தாழ்வு
யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Add -08/12



## விண்ணகப் பிறப்பின் 10ஆவது ஆண்டு நினைவு தினம்

"ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு (தி.பா 27:1)"



இறைவணடி சேர்ந்த
பத்திநாதர் அருளானந்தம்

மண்ணில்
11-04-1937

விண்ணில்
03-02-2002

எம்மோடு என்றும் வாழும் இறைவா! எம் அன்புத்தந்தை வழியாக நீர் எமக்கு செய்த நன்மைத்தனங்களுக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம். உமது அளவுகடந்த அன்பினால் அவரது ஆன்மாவுக்கு அமைதி அளித்து இன்ப வான்வீட்டில் இடமளித் தருள வேண்டுகின்றோம். ஆமென்

புனித லூர்து மாதா கோவிலடி,
தும்பளை: பருத்தித்துறை.

Add: 06/12

குடும்பத்தினர்

# அலசலும் உரசலும்

## (சமகால சமூக ஆன்மீக தொடர்)

### முன்னுரை

சமகால நிகழ்வுகள் இன்று வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் ஏதோ ஒரு வகையில் தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுததி வருவது உண்மையே! ஆனால் இந்த மாற்றங்கள் ஆரோக்கியமான சமூக, ஆன்மீக முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்கின்றதா என்பது கேள்விக்குரிய விடயமே. இன்று எமது சமூக வாழ்க்கை முறையிலே, ஆன்மீக வாழ்விலே பல சவால்களை சில நிகழ்வுகள் தோற்றுவித்துள்ளன. இத்தகைய சவால்களை உராய்வுகளை ஆராய்ந்து ஒரு ஆரோக்கியமான சமூக ஆன்மீகத்தை கட்டியெழுப்ப உதவுவதே எமது கருத்தியல்புகளின் இலக்காகும். ஆன்மிகக் கோட்பாடுகளை கருத்தியலாளர் வெளிப்படுத்துவதை விடுத்து ஆன்மீகத்தை சமூகப் பின்புலத்தில் தோய்ந்த இறையனுபவமாக, உண்மைத்தனமான (authentic) வாழ்விற்கு இட்டுச் செல்லும். வாழ்வின் தேடலாக அமைய வழிகாட்டுவது அவசியம்.

### மறைவாழ்வுக்கல்வியா? அது என்ன?

இன்றைய காலகட்டத்தில் கல்வி வியாபாரமாகிவிட்டது. பொருளாதாரத்தை மையப்படுத்[illegible] கல்வி முறையே இன்று காணப்படுகின்றது. கல்வி கற்று நல்ல தொழில் பெற்று சமூகத்தில் வசதிகளுடன் வாழ உந்துதலை கொடுக்கும். கல்வியாகவே மாறிவிட்டது. மாணவர்கள் புத்தகப் பைகளை சுமக்குமளவிற்கு சுமையாகி விட்டது. இத்தகைய ஆய்வுமுறை துறைசார்ந்த வல்லுனர்களை உற்பத்தி செய்யுமேயொழிய, நல்ல ஆளுமையுள்ள மனித உறவுகளை முதன்மைப்படுத்தி வாழும் மதிப்பீடுகளினால் உருவாக்கப்பட்ட மனிதர்களை உருவாக்காது இன்று எங்கு பார்த்தாலும் ரியூசன் வழங்கும் கல்வி நிலையங்கள்! முன்பு படித்து பட்டம் பெற்வர்கள் எல்லாம் ரியூசன் நிலையங்களிலா கல்வி கற்றார்கள்? ஏன் பாடசாலைகளில் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் கற்பிக்க மாட்டார்களா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. அத்துடன் சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் ரியூசன் பெறுகின்றார்கள் என்று சொல்வதில் பெருமைப்பட்டும் கொள்கிறார்கள். ரியூசன் ஒரு நாகரீகம் (Fashion) என்று சொல்லுமளவிற்கு சென்றுவிட்டது. ஏன் ஞாயிறு திருப்பலிக்கு செல்லாமல் கூட ரியூசன் செல்லும் மாணவர்கள் எத்தனை பேர்! இதை ஊககுவிக்கும் பெறறோரும் உண்டு! நிலைமைகள் இப்படியிருக்கும் போது எப்படிப் பெற்றோர்கள் பிள்ளைகளை இறைப்பற்றிலும், ஞானத்திலும் உருவாக்க முடியும்? இத்தகைய இடைவெளியை ஒரு விதத்தில் நிரப்புவதாகவே சில வேளைகளில் மறை வாழ்வுக் கல்வி அமைந்து விடுகிறது. மறைவாழ்வுக் கல்விக்கு பெற்றோர்களே சில வேளைகளில் தடைக்கற்களாக அமைந்து விடுவது உண்மையே! கிறிஸ்தவ வாழ்வில் முதிர்ச்சியும் கிறிஸ்துவில் உருவமாற்றம் பெற்று உயிருள்ள சாட்சிகளாக சான்று பகர்ந்து வாழ உருவாக்குவதுமே மறைவாழ்வுக் கல்வியின் இலக்காகும்.

### சீரழிவுகள் சீராக்கப்பட மறை வாழ்வுக் கல்வி தேவை!

இன்று எமது யாழ். மண்ணில் இடம்பெறும் கலாச்சார சீரழிவுகள் தமிழ் சமூகத்தின் உளப் பிறழ்வு நோக்கிய வாழ்க்கை முறைக்கு கட்டியம் கூறுவதாக அமைகின்றது. குறிப்பாக இளைய தலைமுறையினர் குறிவைக்கப்படுகின்றனர். இளவயது கர்ப்பங்கள், போதை வஸ்த்துப் பாவனை, குடிப் பழக்கத்திற்கு அடிமையாதல் போன்ற பிரச்சினைகள் தமிழ் மக்களின் வாழ்வியலில் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது. 'இருளை பழிப்பதை விட ஒளியை ஏற்றுவது மேல்' என்பதற்கொப்ப சமூகம் கெட்டுவிட்டது என்று சொல்லிக் கொண்டிருப்பதை விட என்ன செய்யலாம் என்று சிந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். தெய்வ பயமின்மை, நம்பிக்கை வாழ்வின் தளர்ச்சி என்பன தொடர்பு சாதனங்களின் அதீத பாவனையாலும், நுகர்வுக் கலாசாரத்தாலும் ஏறபட்டுள்ளது. ஒரு இளைய தலைமுறையை போரினால் இழந்த எமது சமூகம் அடுத்த தலை முறையை ஒழுக்க நெறி பிறழ்வு போரின் மூலம் இழக்க முடியாது. இத்தகைய ஒழுக்க நெறி பிறழ்வை இளைய சமூகத்தினர் மத்தியில் ஊக்கப்படுத்தும் புறச்சக்திகளை இனங்கண்டு கொள்வதும் அவசியமாகும். வேலியே பயிரை மேய்கின்ற நிகழ்வுகளும் அரங்கேறுகின்றன.

### ஆரோக்கிய சமூகத்தை நோக்கி

இத்தகைய பின்புலத்தில் மீண்டும் ஒரு ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப இளையோரிடையே இறைபற்றையும் சமூகப் பொறுப்புணர்வையும் ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயாமாகும். எனவே மறை வாழ்வு கல்வியானது இளையோருக்கு அன்பு கலந்த வழிகாட்டல் மூலம் அளிக்கப்படவேணடும் இளையோரது உணர்வுகளை, ஏக்கங்களை புரிந்து கொண்டு அவர்களை சரியான தேர்வுகளை மேற்கொள்ள வழிநடத்தப்பட வேண்டும். இளையோர் மத்தியில் நம்பகத்தன்மையை கட்டியெழுப்பும் வகையில் அருள்பணியாளர்களின் வாழ்வும் முன்னுதாரணமாக அமைதல் இன்றியமையாதது. இத்தகைய நம்பிக்கை பின்புலத்திலே இளையோர் அணுகப்பட்டு மதிப்பீட்டுக் கல்வியோடு மறை வாழவுக்கல்வியும் அளிக்கப்படுதல் அவசியமாகும். சமூகத் தீமைகளின் மட்டில் தொடர் விழிப்புணர்வு இளையோர் மத்தியில் ஏற்படுத்தப்பட வேணடும் அதனை அவர்களே மேற் கொள்ள தெருநாடகங்கள், பிர சுரங்கள், தொடர்புசாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். இளையோர் தோழமைக் குழுமங்களை பங்குகளில் உருவாக்கி இளையோரை ஒன்று சேர்த்து செபத்திலும், இறைவார்த்தையிலும் ஊன்றுவதற்கு வழிமுறைகளை தொடர்ந்து தேட வேண்டும். பெற்றோர்களின் பாரிய பங்களிப்பும் இளையோரை வழிநடத்த இன்றியமையாதது. தங்கள் பிள்ளைகளின் செயற்பாடுகளையிட்டு விழிப்புணர்வு இல்லாத நிலையே பெரும்பாலான பெற்றோர் மத்தியில் காணப்படுவது கவலைக்குரிய விடயமே. முதலில் சமூகத் தீமைகளின் மட்டில் பெறறோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை பற்றி சிந்திக்க வேண்டும். தெருவில் சந்திகளில் வலம் வரும் இளையோரை தெருவிலேயே அவர்களை ஒன்றாகக் கூட்டி சில செயற்திட்டங்களை செயற்படுத்துவது அவசியமாகும். சமூக தீமைகளின் மட்டில் இளையோரை ஒன்று திரட்டி பேரணிகள், விழிப்புணர்வு, சுவரொட்டிகள், விளையாட்டுக்கள் மூலம் ஆக்கபூர்வமாக செயற்பட முன்வருவோமா!

அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி
OMI
(உரசல் தொடரும்)

# நற்கருணை வழங்குகின்ற, பெறுகின்ற முறை

அருட்பணி. ரோலிங்டன்
பொதுச்செயலர் - தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு.

தற்பொழுது நடைமுறையில் பல இடங்களில் குறிப்பாக, கன்னியர் இல்லங்களிலோ தனியாகத் திருப்பலி நடைபெறும் நிறுவனங்களிலோ திருப்பலியில் திருச்சபையின் படிபினைகளுக்கு முரண்பாடான முறையில் நற்கருணை வழங்கப்படுகிறது: அதாவது, முதலாவதாக அருள்பணியாளர் நின்றுகொண்டு திருப்பலி நிறைவேற்றினால் நற்கருணையைப் பீடத்தின்மேல் வைத்துவிட்ட இறைமக்கள் தாங்களாகவே வந்து நற்கருணையை உட்கொள்ள அனுமதிக்கப்படுவதும், இரு குணங்களில் நற்கருணையை உட்கொண்டால் திருவுடலை எடுதது திரு இரத்தத்தோடு தோய்த்து தாங்களாகவே உட்கொள்வதும்; இரண்டாவதாக, அருள்பணியாளர் அமர்ந்து கொண்டு திருப்பலி நிறைவேற்றினால் நற்கருணைப் பாத்திரத்தையும் இரசப் பாத்திரத்தையும் 'சுற்றலில்' விடுவது.

நற்கருணை வழங்கப்படும் முறை என்னவென்று அறிந்திருந்தும் இதுபோன்ற முரண்பாடான முறைகளில் நற்கருணை வழங்கப்படுவது மிகவும் வருத்தத்திற்குரியது. இது வரவேற்புக்கு உரிய செயல் அல்ல. ஓர் அருள்பணியாளர் ஒரு முறையில் நற்கருணை வழங்குவதும் மற்றொருவர் பிறிதொரு முறையில் வழங்குவதும் இறைமக்கள் அருள்பணியாளரோடு விவாதிப்பதற்குக் காரணமாக அமைந்துவிடுகிறது. எனவே, நற்கருணை வழங்கப்படும் முறையையும் பெறுகின்ற முறையையும் அனைவரும் மீண்டும் திருச்சபையின் படிப்பினைகள் வழியாக அறிந்து கொள்வோம்.

**அ. உரோமைத் திருப்பலி நூலின் பொதுப்படிப்பினை எண் 72/3 கூறுகின்றது:**

✠ "அப்பத்தைப் பிட்டு, திருவிருந்தில் பங்கேற்பதால், திருத்தூதர்கள் கிறிஸ்துவின் கைகளிலிருந்து பெற்றுக் கொண்டது போல, இறை மக்கள் பலராயினும், ஒரே அப்பத்திலிருந்து ஆண்டவரின் இரத்தத்தையும் பெறுகின்றனர்".

✠ 'கிறிஸ்துவின் கைகளிலிருந்து பெற்றுக்கொண்டதுபோல' என்ற திருச்சபையின் படிப்பினையும்

✠ "நற்கருணை உட்கொள்வதற்காக வரிசையில் செல்பவரின் ..." (86), 'இறைமக்களுக்கு அருளடையாள உணவு வழங்கப்படும்வரை (86) என்ற திருச்சபையின் படிப்பினையும்

✠ "பின்னர் அருள்பணியாளர் அப்பத்தட்டை அல்லது நற்கருணைப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு நற்கருணை வாங்குவோரை நோக்கிச் செல்கிறார். அவர்கள் வழக்கப்படி வரிசையில் வருவார்கள். இறை மக்கள் அர்சிக்கப்பட்ட அப்பத்தை அல்லது திருக்கிண்ணத்தை தாங்களாகவே எடுத்து உட்கொள்ளுதல் கூடாது. அவற்றை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுதலும் கூடாது. ஆயர் பேரவை முடிவிற்கேற்ப இறைமக்கள் முழந்தாளிலிருந்தோ நின்று கொண்டோ நன்மை உட்கொள்ளலாம். நின்று கொண்டு நன்மை வாங்கினால் ஒழுங்கு முறைகளில் குறிப்பிட்டுள்ளபடி நன்மை வாங்கும் முன் தகுந்த வணக்கம் செய்ய வேண்டும்" (160) என்ற படிப்பினையும்

**ஆ. 'மீட்பின் அருள்சாதனம் (2004) என்ற கொள்கைத் திரட்டுக் கூறுவதையும் காண்போம்:**

✡ "இறைமக்கள் நற்கருணையையோ அல்லது இரசப் பாத்திரத்தையோ "தாங்களாக எடுத்துக் கொள்வதும் அல்லது ஒருவர் மற்றொருவருக்கு அளிப்பதும்" முறையற்றதாகும். மேலும் இப் பின்னணியில், திருமணத் திருப்பலியின் போது மணமக்கள் ஒருவர் ஒருவருக்கு நற்கருணை அளிக்கும் முறையற்ற செயல் கைவிடப்பட வேண்டும்" (94) என்ற படிப்பினையும்

✡ "நற்கருணை உட்கொள்வோர் திரு இரத்தப் பாத்திரத்திலிருந்து தாமாகவே நற்கருணையைத் தோய்த்தெடுப்பதோ அல்லது தோய்த்தெடுக்கப்பட்ட நற்கருணையைத் தம் கையில் பெற்றுக் கொள்வதோ அனுமதிக்கப்படக் கூடாது" (104) என்ற படிப்பினையும்

அருள்பணியாளர்களிடமிருந்தோ நற்கருணை வழங்க ஆயரின் அனு மதி பெற்றவரிடமிருந்தோ தான் நற்கருணையை இறைமக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறுகின்றன.

அதே சமயத்தில், திருத்தொண்டரும் இறைமக்களுக்கு நற்கருணை வழங்க ஆயரால் அல்லது அருள்பணியாளரால் நியமனம் பெற்வரும் நற்கருணையை அருள்பணியாளரிடமிருந்துதான் பெறவெண்டும் என்பதை நினைவில் கொள்க (உரோமைத் திருப்



பலி நாலில் பொதுப் படிப்பினை, 182, 162).

எனவே திருப்பலி நிறைவேற்றுபவர்களும் நற்கருணை வழங்க வருபவர்களும் தங்களுடைய புதுமையையும் படைப்பாற்றலையும் உருவாக்குவதைத் தவிர்த்தும் நற்கருணைப் பெறுகின்றவர்கள் இவற்றை வரவேற்பதைத் தவிர்த்தும் திருச்சபையின் வழிமுறைகளை உரிய விதத்தில் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டுள்ளனர் என்பதை உணர்ந்து திருவழிபாட்டில் ஒருமித்த உணர்வுடன் பங்குபெறுவோம்.

# புனித நாட்டிற்கான 08 நாள் திருப்பயணம்

மறைக்கல்வி ஆண்டினை சிறப்பிக்க யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம் ஒழுங்கு செய்யும் புனித நாட்டிற்கான திருப்பயணம்

நம் மீட்பரான இயேசுக் கிறிஸ்து வரலாற்றில் மனிதனாகப் பிறந்து வாழ்ந்த இஸ்ராயேல் நாட்டிற்கு திருப்பயணம் செய்ய விரும்புவோருக்கு யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம் ஒழுங்கு செய்யும் அரிய சந்தர்ப்பம்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் திரும்பும்வரை சகல பயண ஒழுங்குகளும் செய்யப்படும்.

இயேசுவின் வாழ்வோடு தொடர்புபட்ட சகல இடங்களுக்கும் செல்லுதல். அனைத்து விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

பங்குனி மாதத்திலும், சித்திரை மாதத்திலும் பயண ஒழுங்குகள் உள்ளன.

**பயணத் தொகை: ஒருவருக்கு ரூபா 170,000/- மட்டுமே.**

**மேலதிக விபரங்களுக்கு:**
**அருட்பணி. போல் றொகான்**
**இயக்குனர்**
**யாழ். மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணையம்**

**(உங்கள் பங்குக் குருக்கள் மூலமாகவும் அருட்திரு போல் றொகான் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்)**

# போராட்டம் நடைபெற்றமைக்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை

## அமெ.எம்.பிகளிடம் யாழ். ஆயர் எடுத்துரைப்பு

**இலங்கையை அமெரிக்கா அவதானித்து வருகின்றது -அமெ.எம்.பிக்கள்-**

யுத்தம் எதற்காக நடைபெற்றதோ அதற்கான தீர்வு இன்னும் பெற்றுத்தரப்படவில்லை என யாழ். ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்தார்.

அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதிநிதிகளும் நேற்று முன்தினம் மாலை யாழ். ஆயரை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகின்ற போதும் எமது மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை அரசுமந்த கதியிலேயே நிறைவேற்றுகின்றது. முக்கியமாக போரின் போது யுத்த சூனியப் பிரதேசங்களில் மக்களின் வாழ்விடங்கள் முற்று முழுதாக சேதமடைந்தன. இவர்களுக்கான வீடுகளினை புனரமைத்தல் அல்லது கட்டும் பணிகள் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெறுகின்றன.



அரசாங்கத்திற்கு சில வெளிநாட்டு நிறுவனங்கள் உதவிகளைச் செய்கின்ற போதும் அது போதுமானதாக இல்லை. அதிகளவிலான மக்கள் நிர்க்கதியாகவே வாழ்ந்து வருகின்றனர்.

அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் எமது மக்களுக்கு எதுவித விளக்கங்களும் இல்லை. அதனை வாசித்து அறிந்து கொள்வதற்கான சூழ்நிலைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதன் குறைபாடுகளை பத்திரிகைகள் சுட்டிக் காட்டியும் உள்ளன.

இவ் அறிக்கை மக்களுடைய முழு அபிலாசைகளையும் நிறைவேற்றக் கூடியதொன்றல்ல. இதற்கான மாற்றுத் தீர்வு ஒன்று பெற்றுத்தரப்படல் வேண்டும்.

யுத்தத்தின் போதும் அண்மைக் காலங்களிலும் காணாமற்போனவர்களைப் பற்றி எதுவித தகவலுமில்லை. இது மக்களிடத்தில் பெரியதொரு கேள்வியாகவுள்ளது. இதற்கான பதில் இதுவரை தரப்படவில்லை.

அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் பேச்சுவார்த்தை மிகவும் தாமதமடைந்து செல்கின்றது. இதில் இருதரப்பும் முழு வீச்சில் ஈடுபடுவது அவசியமாகும். அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் காணப்படும் வீதிகள் சீராக்கப்படல் வேண்டும். மருத்துவ சேவைகள் விஸ்தரிக்கப்படல் வேண்டும் என மேலும் தெரிவித்த போது, கருத்து வெளியிட்ட எம்.பிக்கள் குழு,

இலங்கையில் வட பகுதியில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் அமெரிக்கா மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என தெரிவித்தனர்.

இதேவேளை, இச் சந்திப்பில் அமெரிக்க தூதரக அரசியல் ஆலோசகர் கலாநிதி போல் எம். காட்டர்.யு.எஸ். எயிட் திட்டத்தின் பணிப்பாளர் ஜேம்ஸ் பெக்னர், ஜனநாயகம் மனிதவுரிமை தொழிலாளர் அமைப்பின் பிரதிச் செயலாளர் தோமஸ் ஒமெலியா, தெற்கு மற்றும் மத்திய ஆசிய அரசியல் விவகாரச் செயலாளர் அலிசா உள்ளிட்ட ஆறுபேர் கொண்ட குழுவினர் கலந்துரையாடினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எதிர்வரும் தை 28ஆம் திகதி சென்னை லொயோலா கல்லூரியில் நடைபெறவுள்ள 84ஆவது பட்டமளிப்பு விழாவில் ஊடகக் கலைகள்துறை யில் முதுமானிப் பட்டப்படிப்பை நிறைவு செய்து முதன்மை மாணவர் விருதையும், தங்கப் பதக்கத்தையும் பெறவிருககும் எமது பாதுகாவலன் ஆசிரியரும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் நிதிமுகாமையாளருமாகிய அருட்பணி. எஸ். ஏயின்சிலி றொஷான் அடிகளார் அவாகளை வாழ்த்தி மகிழ்வதுடன் ஊடகத்துறையிலும், கல்வித்துறையிலும் அவர் பணி சிறக்க நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றோம்.

முகாமையாளர், பணியாளர்கள்
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்.





திருமணம் என்கின்ற திருவருட்சாதனத்திலே 28-01-2012 இணைந்துள்ள திரு.திருமதி நிறோஷன் சாலினி அவர்களை வாழ்த்தி அவர்களது திருமண வாழ்வு இன்பகரமாக அமைய செபிக்கின்றோம்.

இவர்களை வாழ்த்தி நிற்கும்
புனிதவளன் அச்சக
முகாமையாளர், பாதுகாவலன் ஆசிரியர்,
சக ஊழியர்கள்.


## இந்தியா மூன்றாம்....(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபோன்ற மத்தியஸ்த பணியை ஆற்றியபோதும் தமிழ்த் தலைவர்கள் இந்திய சமாதான ஒப்பந்தத்தின் தன்மைகளை உணராமலும் தமக்குள் கெட்டித்த[illegible]க ஒன்றிணைந்து செயற்படாமலும் தூக்கி எறிந்துவிட்டனர்.




எனவே இந்திய வெளிவிவகார அமைச்சானது இந்த சந்தர்ப்பத்தை தவறவிடாமல் எமது வே[illegible] கோளை பரிசீலித்து எமக்கு உதவிக்கு வரும்படி அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். போரினால் தாக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்படுகின்ற மக்கள் மேல் தாங்கள் காட்டும் மனிதாபிமான கரிசனைக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

*யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகை.*

பிரதி
இந்திய உயர்ஸ்தானிகர் - இந்தியத் தூதரகம் கொழும்பு.

# யாழ். கிறிஸ்தவ ஒன்றிப்பு வார கூட்டுறவு வழிபாடுகள்

திருச்சபைகளின் ஒன்றிப்பிற்கான வழிபாடுகள் யாழ் மறைமாவட்ட ஒன்றிப்பிற்கான ஆணைக்குழுவாலும் யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தாலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. இம்மாதம் 18-25ம் திகதி வரை நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றிப்பிற்கான சிந்தனைகள் வெவ்வேறு சபைகளைச் சேர்ந்த அருட்பணியாளர்களினால் முன்வைக்கப்பட்டன. இறுதி நாள் திருவழிபாடு 25-01-2012 புதன்கிழமை யாழ்.சுண்டுக்குழி திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் நடைபெற்றது. திருஅவைகளின் தலைவர்கள் யாவரும் இதில் பங்குகொண்டனர். இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்க்க அனைத்து திருச்சபைகளும் சேர்ந்து செயற்பட வேண்டும் என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தெரிவித்தார். திருச்சபைகளின் ஒன்றிப்பு வார திருவழிபாடுகள் முன்னதாக பின்வரும் இடங்களில் முன்னெடுக்கப்பட்டன.

- யாழ் புனித பேதுரு ஆலயம் (மெதடிஸ்த திருச்சபை) போதனை - **அருட்பணி. மேஜர் நியூட்டன ஜேக்கப்** (இரட்சணிய சேனை)
- உடுவில் தென்னிந்தியச் திருச்சபை போதனை - **போதகர் நைல்ஸ்** (மெதடிஸ்த திருச்சபை)
- உரும்பிராய் தூய இம்மானுவேல் ஆலயம் (அங்கிலிக்கன் திருச்சபை) போதனை - **அருட்பணி. அ.பீ.திருமகன்** (கத்தோலிக்கத் திருச்சபை)
- கைதடி இரட்சணிய சேனை ஆலயம் போதனை - **போதகர் சி.கே. தங்கராஜா** (மெதடிஸ்த திருச்சபை)
- சுன்னாகம் சூராவத்தை புனித திரேசா ஆலயம் போதனை - குருமுதல்வர் **அதிவண. ஜெயந்தா ஜெயவீரசிங்கம்** (அங்கிலிக்கன் திருச்சபை)
- கிளிநொச்சி புனித திரேசா ஆலயம் போதனை - **போதகர் இ. ராஜ்குமாா** (தென்னிந்திய திருச்சபை)

# பருத்தித்துறை மறைக்கோட்டத்தின் 2012ம் ஆண்டுக்குரிய செயற்திட்டம் தயார்

## - மறைக்கோட்ட அருள்பணிச்சபை கூடி தயாரித்தது -

பருத்தித்துறை மறைக்கோட்ட அருள்பணிச்சபை 10-12-2011 அன்று கரவெட்டிப்பங்கில் கூடி தமக்குரிய செயற்திட்டங்களை விவாதித்தது. பங்குத்தந்தையர்கள் அருட்பணிச்சபையின் பிரதி நிதிகள் 63பேர் மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி. ஜோன் மவுலிஸ் தலைமையில் கூடி மீளாய்விலும் திட்டமிடுதலிலும் ஈடுபட்டது. வளவாளராக கலந்து கொண்ட அருட்பணி. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி அவர்களின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற செயலமர்வில் பின்வரும் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

→திருநூலைப் பயன்படுத்தும் செயற்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

→அன்பியங்களுடாக மறைக்கல்வி பணிகளை முன்னெடுத்தல்.

→சமூகசீரழிவு தொடர்பான பாடங்களை தயாரித்து மறையாசிரியர்கள் மூலம் பிள்ளைகளை நெறிப்படுத்தல்.

→இளைஞர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகள் அளித்தல்.

→முதியோர் மன்றங்களை உருவாக்கல்.

→ஆண்கள் தோழமைக் குழுக்களாக உருவாக்கல்.

→துண்டுப்பிரசுரங்களுடாக கலாச்சார சீரழிவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

→வயது ரீதியான குழுக்களை அமைத்து மறையறிவூட்டல்.

'எல்லோருக்கும் மறைக் கல்வி' என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்படும் இவ்வாண்டுக்கான செயற்றிட்டங்கள் பங்கு, ஆலய மட்டங்களில் சிறப்பாகச் சென்று சேரவேண்டும் என்ற நோக்கோடு மேற்படி திட்டங்களை மறைக் கோட்ட அருள்பணிச் சபையின் செயற்குழு தொடர்ந்து முன்னெடுக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

தகவல்: திரு. ஜோர்ஜ்
செயலர், மறைக்கோட்ட
அருள்பணிச்சபை.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.